பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 26 வியாழக்கிழமை 08.04.2021 கதிர் 154

இனி இது ரகசியம் அல்ல!

மதத் தலைவர்கள் எல்லோரும் அரசியலில் சம்பந்தப்படாமல் சற்று ஒதுங்கியிருப்பது நல்லது. அரசியலுக்குள் சிக்கினால் அவர்களின் பெயர்கள் 'ரிப்பேர்' ஆவது தவிர்க்க முடியாததாக இருக்கும். கடந்த காலம் எல்லாம் கிளறி எடுக்கப்படும்.

பக்கம்02

## யாழில் மேலும் 25 பேர் பேருக்கு கொரோனா உறுதி



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் மேலும் 25 பேருக்கும் மன்னாரில் இருவருக்கும் வவுனியாவில் ஒருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன்

2

# குப்பை கொட்டினால் ரூ. 5,000 வெற்றிலை துப்பினால் ரூ. 2,000

## தண்டப் பணத்தை அறிவித்தார் யாழ்.மேயர்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்.மாநகரின் பொது இடங்களில் குப்பை கொட்டினால் 5 ஆயிரம் ரூபாவும், வெற்றிலை எச்சில் துப்பினால் 2 ஆயிரம் ரூபாவும் தண்டப் பணமாக அறவிடப்படவுள்ளது என யாழ். மாநகர சபையின் மேயர் சட்டத்தரணி விஸ்வலிங்கம்

2

## அரைவாசிக்கு மேற்பட்ட கடைகள் இன்று திறப்பு

### போக்குவரத்துச் சேவைகள் பண்ணையிலேயே தொடரும்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். நகரில் மூடப்பட்டிருக்கும் கடைகளில் அரைவாசிக்கு மேற்பட்ட கடைகள் இன்று திறக்கப்படவுள்ளன என்று மாநகர சபை மேயர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ். மாநகரசபையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:-

கடந்த 26 ஆம் திகதியிலிருந்து யாழ். நகர வியாபாரிகளிடம் மேற்கொள்ளப்பட்ட

2

## யாழ்.மாநகர காவல் படைச் சீருடை; விவகாரம் பொலிஸ் விசாரணையில்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்.மாநகரசபையினால் சுகாதார நடைமுறைகளை கண்காணித்தல், கழிவகற்றல் பொறிமுறையை கண்காணித்தல் மற்றும் மாநகரின் ஒழுங்கு உள்ளிட்டவற்றை கண்காணிப்பதற்காக உருவாக்கப்பட்ட காவல் படையின் சீருடை விவகாரம் சிக்கலை ஏற்படுத்தியிருப்பதாக தெரியவருகிறது.

குறித்த சீருடை தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆளுகைப்பகுதிகளுக்குள் காவல்துறையினர் பயன்படுத்திய சீருடையைப் போன்ற வர்ணத்தினால் வடிவமைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த சீருடைகளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்குமாறு பொலிஸார் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்திருப்பதாக தெரியவருகிறது.

இதேவேளை - யாழ்.மாநகரசபை ஆணையாளர்,

2

## பெற்றோல் குண்டு யாழ்.நகரில் வீச்சு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்துக்கு அருகில் – யாழ். கஸ்தூரியார் வீதியில் உள்ள வீடு ஒன்றின் மீது நேற்றிரவு 10.15 மணியளவில் இரு பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டுள்ளன.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே குண்டுகளை வீசிச் சென்றுள்ளனர். ஆள்களுக்குப் பாதிப்பு ஏதும் ஏற்பட்டதாகத் தகவல் ஏதுமில்லை.

## பிரான்ஸ் தூதுவருடன் டக்ளஸ் நேற்று சந்திப்பு



இலங்கையிலுள்ள நான்கு பிரதான மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கு ஆர்வமாக இருப்பதாக இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் எரிக் லெவரூட், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் தூதுவர் தலைமையிலான அதிகாரிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை கடற்றொழில் அமைச்சில் நேற்று சந்தித்தனர்.

2

# மாகாண சபைத் தேர்தல் நடத்துவது மக்கள் ஆணைக்கு விரோதமானது!

## ஜனாதிபதிக்கு 14 பௌத்த அமைப்புகள் கடிதம்

மாகாண சபைத் தேர்தலை அரசு நடத்துவது மக்கள் ஆணைக்கு விரோதமான நடவடிக்கையாகும் என்று பௌத்த அமைப்புகள் தெரிவித்துள்ளன.

14 பௌத்த அமைப்புகளின் தேரர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு நேற்று அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

2



## நௌபர் மௌலவியா பிரதான சூத்திரதாரி?

### சஜித் அணி சந்தேகம்

கொழும்பு, ஏப்ரல் 08

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பின்னணியில் செயற்பட்ட பிரதான சூத்திரதாரி நௌபர் மௌலவி என்பது அரசால் புனையப்பட்ட கதையாகக் கூட இருக்கலாம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல சந்தேகம் வெளியிட்டார்.

(விரிவான செய்தி 12ஆம் பக்கத்தில்...)

## சிறுபான்மை இனத்தவர்களை அடக்கினால் அழிந்தே போவீர்!

### அரசுக்கு ரிஷாத் பகிரங்க எச்சரிக்கை



இலங்கையில் சிறுபான்மை இனத்தவர்களை அடக்க நினைக்காதீர்கள். நாட்டின் மீது பாசத்துடன் நடந்துகொள்ளுங்கள். இதை மீறிச் செயற்பட்டால் உங்களுக்குத்தான் வீழ்ச்சி ஏற்படும். அது அழிவுக்கே வழிவகுக்கும்.

– இவ்வாறு அரசுக்குப் பகிரங்க எச்சரிக்கை விடுத்தார் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன்.

2

## பிரதான சூத்திரதாரி நௌபர் கிடையாது!

### அடித்துக் கூறுகின்றார் ஹக்கீம்

உயிர்த்த ஞாயிறு தினத் தற்கொலைக் குண்டு தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி நௌபர் மௌலவியாக இருக்க வாய்ப்பில்லை.

– இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும்

2



தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அப்படியான சிக்கலில் மாட்டியிருக்கின்றார் பேராயர் கர்த்தினால் மல்கம் ரஞ்சித்.

ஈஸ்டர் ஞாயிறுத் தொடர் குண்டுத் தாக்குதல் தொடர்பிலான விடயத்தில் அவர் அரசியல் செய்யப் புறப்பட்டமை பெரும் குழப்பங்களை ஏற்படுத்தியிருக்கின்றது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வெட்கமில்லையா என்று வினாவுவதற்கு 'அவர் உடை அணிந்து கொண்டுதானா பேசுகின்றார்?' என்று கர்த்தினால் மல்கம் ரஞ்சித் எழுப்பிய கேள்வி பௌத்த மத பீடங்களையும் உசுப்பேற்றி விட்டது. இதுவரை மைத்திரிக்கு எதிராக நின்ற பல பௌத்த மதத் தலைவர்கள் மைத்திரிக்கு ஆதரவாகச் சீறத் தொடங்கியிருக்கின்றனர்.

பேராயர்கள் நிலக்கஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ, ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆகியோரின் இடத்துக்கு மல்கம் ரஞ்சித் ஆண்டகை உயர்ந்த விதம் வரை பல விடயங்கள் கிறிஸ்தவ உயர்வட்டாரங்களில் பேசப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

மறைந்த முன்னாள் ஆயர் இராயப்பு யோசப்பை தமிழர் தேசம் தனது தேசியக் குருவாக மதித்து பிரியாவிடை கொடுத்தது. இறுதி மரியாதை செய்தது. ஆனால் கொழும்பு பேராயருக்குக் கீழான தென்னிலங்கை மறை மாவட்டங்களும், இலங்கை ஆயர் பேரவையும் இராயப்பு யோசப்புக்கு வழங்கிய பிரியாவிடை ஒப்புக்குச் சப்பாணியாகவே அமைந்தது என்பது தமிழ் வண பிதாக்கள் பலரின் ஆதங்கம்.

பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் கிறிஸ்தவ மக்களும் கிறிஸ்தவ மதபீடமும் ஐக்கியப்பட்டு இல்லை, தமிழ்க் கிறிஸ்தவர்கள் - சிங்களக் கிறிஸ்தவர்கள் என்று துருவமயப்பட்டு நிற்கின்றார்கள், வெளியே தெரியாத பிளவு நீடிக்கின்றது என உணர்கின்றோம் - என்றார் வடக்கின் மூத்த வணபிதா ஒருவர்.

திருச்சபை விடயங்களிலும் அரசியல் இருப்பது பற்றிய செய்திகள் அரசல், புரசலாக வெளிவரத் தொடங்கியுள்ளன. திருச் சபையின் மேன்மைக்கு இது நல்லதல்ல என்பதுதான் எனக் கருத்து.

★ ★ ★

நினைப்புத்தான் பிழைப்பைக் கெடுக்கும் என்பார்கள்.

'யாழ்.மாநகர காவல் படை' என்ற பெயரில் ஓர் அமைப்பை யாழ்.மேயர் வீ. மணிவண்ணன் ஆரம்பித்திருக்கின்றார். அவரது செயற்பாடுகள் குறித்து நேற்று முன்தினம் இப்பத்தியில் குறிப்பிடும்போது அவரது அவசரம் Too fast என்றேன். அதற்கு மேலதிகமாக தந்திரோபாயமும் விவேகமுமற்றது போலவும் இப்போது தோன்றுகின்றது.

நல்ல முயற்சியையும் பிழையான முறையில், அவசரப்பட்டு அணுகினால், அந்த எத்தனம் குழம்பி விடும் என்பது அவருக்கும் தெரியும்.

அவரது யாழ்.நகரக் காவல் படை பற்றிய செய்தியை அறிந்ததும், இந்தப் பத்தியின் வாசகர் ஒருவர் அனுப்பி வைத்த படங்களை இங்கு சேர்த்துள்ளேன்.

ஒன்று - பன்னிரண்டு, பதின்மூன்று ஆண்டுகளுக்கு முந்தியது.

மற்றையது - நேற்றைய படம்.

அந்த வாசகர் கூற வருவதை இரண்டு படங்களுமே தன்பாட்டில் விளக்கும் என்று நினைக்கிறேன். நான் ஏதும் எழுதி குழப்பத்தைக் கிளப்பத் தேவையில்லை.

இந்த அணுகுமுறை தேவைதானா? வாசகர்களே தீர்மானிக்கட்டும். பாராட்ட வேண்டுமானால் அவரைப் பாராட்டட்டும். விமர்சிக்க விரும்பினால் விமர்சிக்கட்டும். அது உங்கள் எண்ணத்தைப் பொறுத்தது வாசகர்களே...!

(இது நேற்று மாலை நான் எழுதிய பதிவு. அதற்குப் பின்னர் விவகாரம் பொலிஸ் வரை சென்று விட்டதாக அறிய வந்தது)

– மின்னல் –





## பிரான்ஸ் தூதுவருடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்போதே பிரான்ஸ் தூதுவர் மேற்கண்டவாறு கூறினார்.

கடற்றொழில் மற்றும் நீர்வேளாண்மை போன்ற துறைகளில் மேற்கொள்ளக் கூடிய அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடப்பட்ட இந்தச் சந்திப்பின்போது தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த தூதுவர், தென் பகுதியிலுள்ள காலி, பேருவளை, குடாவெல்ல மற்றும் குரானவெல்ல ஆகிய மீன்பிடி துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கு தமது அரசு விரும்புகின்றது எனவும், அதற்கான ஆய்வு நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டு வருகின்றது எனவும், விரைவில் அதற்கான பணிகளை ஆரம்பிக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் கிழக்கு மாகாணத்தில் நன்னீர் மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்வதற்கு ஆர்வமாக இருப்பதாகத் தெரிவித்த பிரான்ஸ் தூதுவர், இலங்கையிலுள்ள அனைத்து நீர் நிலைகளும் உரிய முறையில் பயன்படுத்தப்பட்டு அதன் மூலம் போதிய அறுவடைகளை பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் கூறினார்.

மேலும், இலங்கையில் கண்ணாடி நாரிழையில் தயாரிக்கப்பட்ட படகுகளால் சுற்றாடல் மாசடைகின்றது எனவும், அவற்றை உரிய முறையில் அப்புறப்படுத்துவதற்கு தகுந்த கட்டமைப்பொன்று ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்ததுடன் இலங்கை கடற்றொழிலாளர்களுக்கு கடற்றொழில் துறையில் பயிற்சிகளை பெற்றுக் கொடுக்கவும் தமது நாடு ஆர்வத்துடன் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கையில் கடற்றொழில் துறையைப் பொறுத்தளவில் வளமான எதிர்காலம் இருக்கின்றது எனவும், அத்துறையை அபிவிருத்தி செய்வதன் மூலம் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்ய முடியும் எனவும் தெரிவித்ததுடன் இத்துறையின் வளர்ச்சிக்கு குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடற்றொழில் துறையின் அபிவிருத்திக்கு உதவுமாறும் தூதுவரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

## அரைவாசிக்கு மேற்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்ததன் காரண மாக மூடப்பட்டிருந்த வர்த்தக நிலையங்க ளில் 75 இற்கும் மேற்பட்ட கடைகளைத் தவிர ஏனைய கடைகள் நாளை (இன்று) மீளத் திறக்கப்படும்.

இன்று (நேற்று) காலை யாழ். மாநகர சபை பொது வைத்திய அதிகாரி தலைமையில் நடந்த கூட்டத்தின்போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே பி.சி.ஆர். பரிசோதனைகளில் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களைத் தவிர்ந்த அரைவாசிக்கு மேற்பட்ட கடைகள் நாளை (இன்று) திறக்க அனுமதிக்கப்படவுள்ளன.

போக்குவரத்துச் சேவைகளை தற்போது உள்ள நிலை போன்று பண்ணைப் பகுதியிலே பேணுவதற்குத் தீர்மானித்துள்ளோம். எனினும், அது தொடர்பான முடிவை எதிர்வரும் நாள்களில் கூடிய ஆராயவுள்ளோம் - என்றார்.

## பிரதான சூத்திரதாரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி நௌபர் மௌலவி என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர கூறியுள்ளார். அவர் இவ்வாறான கருத்துக்களைக் கூறி பின்னர் அவற்றை வாபஸ் பெற்றுக்கொண்ட சந்தர்ப்பங்கள் உண்டு.

இந்தத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. அதனை ஆதாரங்களுடன் நிரூபிக்க முடியும்.

நௌபர் மௌலவியை விடவும் பிரதான சூத்திரதாரிகள் உள்ளனர் என்பதை ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின் மூலமாகவே தெரிந்துகொள்ள முடியும்.

ஈஸ்டர் தாக்குதல் என்ற திரைப்படத்தின் திரைக்கதை வசனம் வேண்டுமானால் இந்த நௌபர் மௌலவியினதாக இருக்கலாம். பிரதான நடிகர் சஹ்ரானாக இருக்கலாம். சில துணைநடிகர்கள் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம். பெண் நடிகையான சாரா என்ற நடிகையைக் காணவில்லை. எனினும், இந்தத் திரைப்படத்தைத் தயாரித்தது யார்? இதனை இயக்கியது யார்? என்ற கேள்விக்கே விடை தேட வேண்டும்.

இந்தத் தாக்குதலின் பின்னணியில் இஸ்ரேலிய உளவுப் பிரிவினர் இருந்தார்களா என்ற சந்தேகம் காணப்படுகின்றது.

இந்தத் தாக்குதல் தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் முழு அளவில் விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை என்றார்.

## யாழில் மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்தார்.

இவர்களில் 17 பேர் யாழ்ப்பாணம் மாநகர சந்தை மற்றும் கடைத் தொகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வு கூடம் என இரண்டிலும் 607 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போதே 28 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நோயாளர் விடுதியில் நால்வருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த 9 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இவர்களில் 5 பேர் யாழ்ப்பாணம் மாநகர சந்தை மற்றும் கடைத் தொகுதிகளைச் சேர்ந்தவர்கள். ஏனைய நால்வரும் ஏற்கனவே சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்கள்.

சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இவர் ஏற்கனவே சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்.

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த இருவருக்கும் தொற்று கண்டறியப்பட்டது. இவர்கள் இருவரும் யாழ்ப்பாணம் மாநகர கடைத் தொகுதியைச் சேர்ந்தவர்கள்.

தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவிலும் இருவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். இவர்கள் இருவரும் சுயதனிமைப்படுத்தலில் கண்காணிக்கப்பட்டவர்கள்.

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த 6 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இவர்கள் நால்வரும் யாழ்ப்பாணம் மாநகர வர்த்தக நிலையங்களைச் சேர்ந்தவர்கள்.

தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

மன்னார் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சேர்க்கப்பட்ட இருவருக்கும் தொற்று கண்டறியப்பட்டது.

வவுனியா பொது வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாநகரில் சந்தை மற்றும் கடைத் தொகுதிகளைச் சேர்ந்தோரின் மாதிரிகள் ஸ்ரீஜெயவர்த்தனபுர ஆய்வுகூடத்துக்கு அனுப்பிவைக்கப் பட்டன. இவற்றின் பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கைக்காகக் காத்திருக்கின்றோம் - என்றார்.

## சிறுபான்மை இனத்தவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் கடந்த 10 வருடங்களாகவே முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இந்தக் காலப்பகுதியில் அளுத்கம, திகன, கொழும்பு கிராண்ட்பாஸ் ஆகிய பிரதேசங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நிலையில் தற்போது சஹ்ரானின் செயற்பாடுகளை அடிப்படையாகக்கொண்டு முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால், உண்மையான முஸ்லிம்கள் சஹ்ரான் போன்றோரின் செயற்பாடுகளை அங்கீகரிக்கமாட்டார்கள்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் தொடர்புடைய குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். அதேபோன்று அந்த விடயத்தில் கைதுசெய்யப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான அப்பாவிகளை அரசு விடுதலை செய்ய வேண்டும் - என்றார்.

## குப்பை கொட்டினால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மணிவண்ணன் தெரிவித்தார்.

குறித்த நடவடிக்கையை மேற்கொள்வதற்காக மாநகர காவல் படை உருவாக்கப்பட்டுள்ளது எனவும் மேயர் குறிப்பிட்டார்.

யாழ். மாநகர சபையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் மாநகரத்தை தூய்மையாகப் பேணுவதற்காக மாநகர சபை ஊழியர்கள் ஐவர் மாநகர காவலர்களாக தனியான சீருடை அணிந்து நாளை (இன்று) முதல் கடமையில் ஈடுபடவுள்ளனர்.

மாநகரத்தைத் தூய்மையாகப் பேணுவதற்காகப் பொது இடங்களில் குப்பை கொட்டுவோர், வெற்றிலை எச்சில் துப்புவோர், வாகனங்களைப் பொது இடங்களில் நிறுத்துவோர், சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுவோரைத் தடுப்பதற்கும், குற்றமிழைப்போருக்குத் தண்டப்பணம் விதிப்பதற்கும் இவர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் கழிவகற்றல் மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பிலும் குறித்த காவலர்கள் தமது பணியைச் செயற்படுத்துவார்கள் - என்றார்.

## மாகாண சபைத் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும், அரசின் தீர்மானம் வாக்களித்த மக்களின் ஆணைக்கு விரோதமானது என்றும் பௌத்த அமைப்புகள் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளன.

நாடாளுமன்றத் தேர்தல் வாக்குறுதிக்கு அமைய நியமிக்கப்பட்டுள்ள புதிய அரசமைப்பு வரைவுக் குழு, அதன் பரிந்துரைகளை முன்வைக்க முன்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது, அமைச்சரவையின் தூரநோக்கற்ற செயற்பாடாகும் என்றும் குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தலை நடத்தி, மாகாண சபைகள் மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டால், அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஏற்ப அரசு செயற்பட வேண்டிய நிலை ஏற்படும் என்றும் பௌத்த அமைப்புகள் எச்சரித்துள்ளன.

வாக்களித்த மக்களின் மிக முக்கியமான எதிர்பார்ப்பை அரசு குறுகிய காலத்தில் மறந்தமை கவலையளிக்கின்றது எனவும் பௌத்த அமைப்புகள் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளன.

## யாழ்.மாநகர காவல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரதம வருமான வரிப் பரிசோதகர் மற்றும் குறித்த காவல் படையில் பணியாற்றுவதற்காக நியமிக்கப்பட்டிருந்த மாநகர சபை ஊழியர்கள் ஐவர் உட்பட்ட ஏழு பேருக்கு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் 03 மணி நேரத்திற்கும் மேலாக தொடர் விசாரணை நடைபெற்றுவருவதாக நேற்றிரவு தெரியவந்துள்ளது.

யாழ்.மேயரும் இரவு விசாரணைக்காக யாழ்.பொலிஸ் நிலையத்தில் பிரசன்னமாகியிருந்தார். கொழும்பிலிருந்து கிடைக்கப்பெற்ற பணிப்பிற்கு அமைய குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுவருவதாகவும் சொல்லப்படுகிறது.

யாழ்.மாநகரில் சுகாதார நடைமுறைகளை கண்காணித்தல், கழிவகற்றல் பொறிமுறையை கண்காணித்தல், மற்றும் மாநகரின் ஒழுங்கு உள்ளிட்டவற்றை கண்காணிப்பதற்காக குறித்த மாநகர பாதுகாப்பு படை உருவாக்கப்பட்டுள்ளதாகவும் நாளை அதன் அங்குராட்பணம் இடம்பெறும் என்றும் இன்று அதற்கான பரீட்சார்த்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாகவும் இன்று காலையில் ஒளிப்படங்களும் காணொளிகளும் வெளியாகியிருந்தமை தெரிந்ததே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெ. மிஷனரியின் குற்றச்சாட்டுக்கு யூனியன் கல்லூரியின் அதிபர் மறுப்பு

'தெல்லிப்பளை திருச்சபையின் ஆதனங்களை ஆக்கிரமிக்க யூனியன் கல்லூரி முயற்சியாம்! குற்றம் சுமத்தி திருச்சபை மூப்பர் அறிக்கை' என்னும் தலைப்பில் நேற்று 'காலைக்கதிர்' நாளிதழில் பிரசுரிக்கப்பட்ட செய்தியை கல்லூரி அதிபர் மறுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள கடிதத்தின் விவரம் வருமாறு:-

எமது கல்லூரிக்கு உரித்தான அதிபர் விடுதி தொடர்பான காணி பற்றி அமெரிக்க மிஷனரி மூப்பர் தங்கள் பத்திரிகையின் ஊடாக வெளியிட்ட கருத்து தவறானது.

யூனியன் கல்லூரி காணிப்பிரச்சினை தொடர்பாக வடமாகாணக் கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் 09.03.2021 அன்று பி.ப 3.30 மணியளவில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர், வடமாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச்செயலாளர், வலிகாம வலய கல்விப்பணிப்பாளர், தெல்லிப்பளை கோட்டக்கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் தெல்லிப்பளை பிரதேச செயலக 06.01.2021 ஆம் திகதி DS/Vn/L/Union College ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் PPYA 892 இல் வரைபடத்தில் காட்டப்பட்ட காணித்துண்டுப்பகுதி யூனியன் கல்லூரிக்கு உரியதென்றும் மற்றும் சிரேஷ்ட நிலஅளவை அத்தியட்சகர், யாழ்ப்பாணம் என்பவரின் கடிதத்தின் பிரகாரம் PPYA 892 இல் வரைபடத்தில் காட்டப்பட்ட காணித்துண்டுப் பகுதி யூனியன் கல்லூரிக்கு உரியது என்றும் வழங்கப்பட்ட மேற்கூறிய கடிதங்களின் அடிப்படையில் மேற்படி கூட்டத்தில் இக்காணிப்பகுதியானது பாடசாலைக்குரியது என்றும் பாடசாலைக்குரிய தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் எனவும் செயலாளரினால் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் அக்காணியினை பாதுகாக்க வேண்டிய பொறுப்பினையும் பராமரிப்பினையும் கல்லூரி நிர்வாகம் மேற்கொண்டு வருகின்றது. எனினும் 07.04.2021 அன்று தங்களுடைய காலைக்கதிர் பத்திரிகையில் 'தெல்லிப்பளை திருச்சபையின் ஆதனங்களை ஆக்கிரமிக்க யூனியன் கல்லூரி முயற்சியாம்' என்னும் தலைப்பில் பிரசுரிக்கப்பட்ட செய்தி உண்மைக்குப் புறம்பானது என்பதனை கூறுவதோடு தங்களது இச்செயற்பாடானது பாடசாலைச்சமூகத்திற்கு மிகுந்த மனவேதனையைத் தருகின்றது.

எனவே இதுபோன்ற அமெரிக்க மிஷனரி மூப்பரின் தகவலுக்கு அமைவாக செய்தியினை வெளியிடாது உண்மைத்தன்மையான செய்தியை பிரசுரிக்க வேண்டுமெனவும் பாடசாலைச் சமூகத்தினது உண்மைத்தன்மையான காணி தொடர்பான செய்தியை பிரசுரிக்குமாறும் தயவாக வேண்டுகின்றேன். -என்று உள்ளது.

**ஆசிரியர் குறிப்பு**

1.சில ஆவணங்களின் அடிப்படையிலும், தமது மேலதிகாரிகளின் கூட்ட முடிவின் அடிப்படையிலும் அக்காணியை பாடசாலை ஆதனமாகப் பேண வேண்டிய நிலைமையில் தாம் இருக்கின்றமையை அதிபர் சுட்டிக்காட்டுவது புரிந்து கொள்ளத்தக்கதே.

2. எனினும் அதிபர் குறிப்பிடும் ஆவணங்களுக்கு அப்பால் வேறு ஆவணங்களும் சான்றுகளும் மூப்பர் தரப்பிலும் அவர்கள் தரப்புக்கு ஆதாரமாக முன்வைக்கப்படுகின்றன.

3. அமெரிக்க மிஷனரி மூப்பரின் தரப்பில் வெளியிடப்பட்ட தகவல்கள் அதிபர் தரப்பினால் மறுக்கப்படுவது போல, அதிபர் தரப்பின் தகவல்கள் மூப்பர் தரப்பினாலும் மறுக்கப்படுகின்றன.

4.ஆவணங்களை - உடன்பாடுகளை - சரிபார்ப்பதும், அவற்றின் உண்மை மற்றும் சட்ட செல்லுபடித் தன்மையைப் பரிசீலிப்பதும் பத்திரிகையின் பணியல்ல.

5. இச்சர்ச்சை உரிய அளவுக்கு மக்கள் கவனத்தை இப்போது ஈர்த்திருக்கின்றது. மேற்படி யூனியன் கல்லூரி இன்று அரச பாடசாலையாக இருந்தாலும் அதை உருவாக்கியதே இந்த அமெரிக்க மிஷன் என்ற அடிப்படையில் கல்லூரியும், நிர்வாகமும் அரச பணிக்கான நன்றி, கடப்பாட்டுடன் மிஷனரிக்கும் சற்று விசுவாசமாகவும் நன்றிக் கடனாகவும் நடந்து கொள்ளவேண்டும் என்று விநயமாகக் கேட்டுக் கொள்கிறோம். (ஆ-ர்)

# மதுபானசாலைகள் ஏப்ரல் 13, 14 பூட்டு

தமிழ் - சித்திரை புத்தாண்டு காலப் பகுதியை முன்னிட்டு எதிர்வரும் 13, 14 ஆம் திகதிகளில் நாட்டின் அனைத்து மதுபான சாலைகளையும் மூடுமாறு இலங்கை மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும் சுற்றுலா வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டகலால் உரிமம் பெற்ற ஹோட்டல்களில் உள்ள மதுபான நிலையங்கள் திறந்திருக்கும்.

அதேபோன்று ஏப்ரல் 26 பௌர்ணமி தினத்தன்றும் நாட்டின் அனைத்து மதுபான சாலைகளையும் மூடுமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலகட்டத்தில் அற்ககோல், போதைப் பொருள் மற்றும் புகையிலை குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகளை வழங்க 1913 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

# பொதிகள் வழங்கும் சேவையை நிறுத்திவைப்பதற்கு தீர்மானம்

## ரயில்வே அதிபர்கள் சங்கம் எடுத்தது

ரயில் நிலையங்களில் கடை நிலை ஊழியர்கள் இல்லாதமையால், இன்று வியாழக்கிழமை முதல் பொதிகள் வழங்கும் செயற்பாடுகளை நிறுத்தி வைக்க ரயில்வே நிலைய அதிபர்கள் தீர்மானித்துள்ளனர்.

இலங்கை ரயில் நிலைய முதுநிலை சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

கடை நிலை ஊழியர்களின் வெற்றிடங்களை நிரப்ப அதிகாரிகள் தவறிவிட்டனர் எனத் தொழிற் சங்க தலைமை செயலாளர் கசுன் சாமர ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

சர்வதேச விதிமுறைகளையும் மீறி ஊழியர்களுக்குத் தொடர்ச்சியாகக் கடமைகள் வழங்கப்படுகின்றன என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

பெரும்பாலான ரயில் நிலையங்களுக்கு குறைந்தது ஆறு ஊழியர்கள் தேவைப்படுகிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையிலேயே இன்று காலை முதல் பொதிகள் வழங்குவதைத் தவிர்க்க முடிவு செய்துள்ளதாக ரயில்வே அதிபர்கள் தொழிற்சங்க செயலாளர் தெரிவித்துள்ளார்.

# உணவுப் பொருள்களின் தரம் குறித்து ஆராயுமாறு பிரதமர் மஹிந்த பணிப்பு



உணவுப்பொருள்களின் தரம் குறித்து தொடர்ச்சியாக ஆராயப்பட வேண்டுமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, வர்த்தக அமைச்சிற்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

உணவுப் பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பண்டிகைக் காலத்தில் தரமான பொருள்கள் குறைந்த விலையில் நுகர்வோருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தட்டுப்பாடு இன்றிப் பொருள்கள் விநியோகம் செய்யப்படுகின்றனவா என்பது தொடர்பில் கண்காணிக்கும் பொறுப்பு வர்த்தக அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும் நச்சுப் பொருள்கள் அற்ற உணவுக் கலாசாரமொன்றை உருவாக்கவும் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

# கொழும்பு பகுதியில் கைப்பேசி விற்பனை நிலையம் முற்றுகை

## வங்கிக் கணக்குகளில் 30 கோடி ரூபா பணம்

பதிவு செய்யப்படாத கைப்பேசி விற்பனை நிலையங்கள் சுற்றி வளைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தொலைத்தொடர்பு கட்டுப்பாட்டு ஆணையகத்தில் பதிவு செய்து கொள்ளாத கைப்பேசி விற்பனை நிறுவனங்கள் இவ்வாறு சுற்றிவளைக்கப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகாரசபையின் தலைவர் ஓய்வுநிலை மேஜர் ஜெனரல் சாந்த திசாநாயக்க இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொழும்பு பகுதியின் கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் வாடிக்கையாளர்களிடம் பெருந்தொகை பணத்தை மோசடி செய்த கைப்பேசி விற்பனை நிலையமொன்றில் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நுகர்வோர் விவகார அதிகாரசபைக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய இந்த கைப்பேசி விற்பனை நிலையம் முற்றுகையிடப்பட்டுள்ளது.

அதிக விலையுடைய கைப்பேசிகளை மிகவும் குறைந்த விலைக்கு வழங்குவதாக பிரசாரம் செய்து வாடிக்கையாளர்களிடம் பெருந்தொகை பணம் வசூலிக்கப்பட்டுள்ளது.

பணம் செலுத்தி 20 நாள்களின் பின்னரே கைப்பேசி வழங்குவதாக உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

எனினும் குறித்த தினங்களில் கைப்பேசிகள் வழங்கப்படாத காரணத்தால் வாடிக்கையாளர்கள் இது தொடர்பாக முறைப்பாடு செய்துள்ளனர். இந்த கைப்பேசி விற்பனை நிலையத்தின் உரிமையாளர்களது வங்கிக் கணக்குகளில் சுமார் 30 கோடி ரூபா பணம் வைப்பிலிடப்பட்டிருந்தமை விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# முஸ்லிம்களை மடையர்கள் என்று நினைத்துவிட்டார்கள்

இலங்கையில் உள்ள முஸ்லிம்கள் அனைவரும் மடையர்கள் என்று நினைத்துக் கொண்டு முஸ்லிம் ஜனாஸா பெட்டிகளை எரித்ததாகக் கூறிகின்றார்கள் என முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்துள்ளார்.

நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்-

ஒரு சில அரசியல்வாதிகள் கல்குடாப் பிரதேசத்திற்கு துரோகம் செய்துள்ளனர். அத்தோடு உலமாக்கள் மற்றும் படித்தவர்கள் கல்குடா அரசியலுக்கு துரோகம் செய்துள்ளனர். இவர்கள் அரசியலை பணமாக்கிய தன் பலம் இத்தனை ஜனாஸாக்கள் எரிக்கப்பட்டன.

இந்த நாடு முஸ்லிம்களை போட்டு சின்னா பின்னமாக்குகின்றது. இந்த ஆட்சியாளர்கள் முஸ்லிம்களை இவ்வளவு கேவலப்படுத்துகிறது, இன்னும் முஸ்லிம்களை கேவலப்படுத்த போகும் நிலைமை உள்ளது. - என்றார்.



அமீர் அலி காட்டம்

# வாராஹி அம்பாள் மஹோற்சவம்

கொக்குவில் மேற்கு வாராஹிபுரத்தில் அமைந்துள்ள ஸ்ரீ வாராஹி அம்பாள் ஆலயத்தில் திவ்ய பிரம்மோற்சவ உற்சவம் கடந்த திங்கட்கிழமை (05.04.2021) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அதைத் தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெற்று வருகின்றது. தொடர்ந்து 15 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறவுள்ளது. அத்துடன் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு வைரவர் பொங்கல் நடைபெறவுள்ளது.

ஆகவே ஆலய வழிபாட்டிற்கு வருபவர்கள் அனைவரும் சுகாதார முறைப்படி வருமாறு ஆலய நிர்வாகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## எத்தகைய அரசமைப்பு வரும்?

**இலங்கைத் தமிழர்களுடைய அரசியல் தலைவர்கள் நீண்ட காலமாக எடுத்துரைத்து வந்த விடயத்தை நேற்று மீண்டும் ஒரு தடவை தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர்கள் உரத்து எடுத்துரைத்திருக்கின்றார்கள்.**

**வழமைபோல, பௌத்த – சிங்களப் பேரினவாத வெறி முற்றிய நிலையில், அந்த மேலாதிக்கத் திமிரிலும் மேலாண்மை அதிகாரத்திலும் மூழ்கிக் கிடக்கும் தெற்கு ஆட்சிப் பீடத்தின் காதுகளில் அது விழாது என்பது திண்ணம்.**

***“நாட்டின் இன்றைய பேரழிவுச் சூழலுக்கும், பின்னடைவு இழி நிலைக்கும் இன்றைய ஒற்றையாட்சியே காரணம். பொருளாதார ரீதியிலும், பிற விடயங்களிலும், இலங்கை தோற்றுப்போன நாடாகத் துவண்டு கிடப்பதற்கு ஒற்றையாட்சி முறையே காரணம். சமஷ்டி அல்லது கூட்டாட்சி முறையிலான அரசமைப்பு ஒன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்தினால்தான், தோல்வியுற்ற நாடு என்ற நிலையிலிருந்து இலங்கை மீண்டெழுந்து நல்லிணக்கம், சமாதானம், அபிவிருத்தி ஆகியவற்றுடன் மேன்மையுற வாய்ப்புக் கிட்டும்.”***

**– இவ்வாறு இடித்துரைத்திருக்கின்றது நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ்ப் பிரதிநிதிகள் குழு.**

**அரசமைப்பு உருவாக்கத்துக்கான நிபுணர் குழுவில் சட்டத்துறையில் கற்றறிந்த அறிஞர்கள் பலருள்ளனர். இலங்கையின் சரித்திரமும் கடந்த கால நிகழ்வுகளின் காரணங்களும் அவர்களுக்கு நன்கு தெரியும். புரியும். தமிழ்த் தலைவர்கள் இந்த விடயத்தை விரிவாக எடுத்துரைப்பதற்கு முன்னரே இதுவெல்லாம் அவர்களுக்கு அத்துப்படியாகத் தெரிந்தவையே. நீதியரசர் விக்னேஸ்வரனும் அவர் அணியினரும் இந்த விடயங்களைச் சுட்டிக்காட்டுவதற்கு முன்னரே அவர்களுக்கு அவ்வளவும் புரிந்திருக்கும்.**

**ஆனாலும் நீதியரசர் விக்னேஸ்வரன் அணியினரின் நேற்றைய சமர்ப்பணம் எல்லாம் விழலுக்கு இறைத்த நீர்தான். புறக்குடத்துத் தண்ணீர்தான். செவிடன் காதில் ஊதிய சங்குதான்.**

**பௌத்த – சிங்களப் பேரினவாத ஆட்சிப் பீடத்தின் நோக்கையும், போக்கையும், இலக்கையும் செயற்படுத்தும் கருத்துடன் நியமிக்கப்பட்டதே இந்த நிபுணர் குழு. அதிலிருந்து வழுவி, இந்த நிபுணர் குழு நீதி, நியாயமாக நடக்கும் என்றோ, தமிழர் தரப்பில் முன்வைக்கப்பட்ட நியாயங்களைக் கருத்தில் கொள்ளும் என்றோ நம்புவதற்கு இடமில்லை.**

**நீதி தேவதையின் தராசை முன்நிறுத்தியிருப்பதாகக் கூறப்படும் இலங்கை நீதித்துறையே – நீதித்துறையினரே – இனவாத விடயங்கள் வரும் போது, அந்தப் பேரினவாத சகதிக்குள் விழுந்து விடுவதை கடந்த சுமார் எழுபத்தியைந்து ஆண்டுகளாக இந்த நாட்டில் தமிழர்கள் கண்டே வந்துள்ளனர்.**

**அதனால்தான் இலங்கையின் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் தொடர்பில் நீதியை நிலைநாட்டி, பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் இலங்கை நீதித்துறையினர் மற்றும் நீதிமன்றங்களின் மீது அடியோடு நம்பிக்கை இல்லை என்றும், சர்வதேச நீதிப்பொறிமுறையே இங்கு அவசியம் என்றும் தமிழர்கள் வலியுறுத்தி ஒற்றைக் காலில் நிற்கின்றனர்.**

**நீதி தேவதையின் பேரில் நீதித்துறை ஆசனத்தில் அமர்வோரின் கண்களையே பேரினவாத வெறி மறைக்குமேயானால், அரசமைப்பு உருவாக்க நிபுணர் குழு நேர்மையாக நடக்கும் என்று நம்புவதற்கு இடம் இல்லை என்று கூறுவதும் ஏற்புடையதே.**

**ஏவிய – உத்தரவிட்ட – தரப்புகளின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் எண்ணத்தில் அக்குழு பணியாற்றும் என்றாலும் தமிழர்கள் தம் கடமையைச் செய்திருக்கின்றார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியும் இது விடயத்தில் தமிழர்கள் தரப்பின் நிலைப்பாட்டை உரிய மட்டத்தில் – உரிய முறையில் – எழுத்திலும் வாய்மூல சமர்ப்பணத்திலும் – முன்வைத்திருக்கின்றனர்.**

**பிரிட்டனிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்றதாகக் கூறப்படும் காலத்தின் பின்னர், இலங்கையில் இரண்டு அரசமைப்புகள், கொண்டு வரப்பட்டன. முதலாவது – 1972இல் கொண்டு வரப்பட்ட குடியரசு யாப்பு. அடுத்தது – நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைக்கு வழி செய்த 1978ஆம் ஆண்டின் யாப்பு. அதுவே கடந்த 43 ஆண்டுகளாக நடைமுறையிலும் உள்ளது.**

**இந்த இரண்டு அரசமைப்புகளுமே அப்போதைய பேரினவாத அரசுகளால் தமிழர்கள் மீது வல்வந்தமாகத் திணிக்கப்பட்டன. அந்த அரசுமைப்புக்களின் உருவாக்கத்திலோ, நடைமுறையாக்கத்திலோ இந்த நாட்டின் இரண்டாவது பெரிய இனமான தமிழர்கள் சம்பந்தப்படவேயில்லை. அவர்களின் விருப்புக்கு – எதிர்ப்புக்கு – மாறாகவே அவை தமிழர்களையும் உள்ளடக்கி அவர்கள் மீது திணிக்கப்பட்டன.**

**அப்போது – 1972 இலும், 1978இலும் – இருந்த அரசுகளை விட பேரினவாதத்திலும், பௌத்த – சிங்கள மேலாதிக்க சிந்தனையிலும், மேலாண்மைத் திமிரிலும் உச்சமும் வலிமையும் பெற்றுள்ள இனவாத அரசே இன்று ஆட்சிப் பீடத்தில் உள்ளது.**

**தனது பேரினவாத மேலாதிக்கத்தை இனிமேல் மாற்ற முடியாத வகையில் நிரந்தரமாகத் திணித்து, நிலைநாட்டும் ஒரே இலக்கிற்காகவே இந்தப் புதிய அரசமைப்பு உருவாக்கத்தை அது முன்னெடுக்கின்றது. அதனிடமிருந்து நீதி, நியாயமான – பல்லினங்களையும் உள்ளடக்கிய – ஓர் சிறந்த அரசமைப்புக் கிட்டும் என எதிர்பார்ப்பது பாம்பின் வாயிலிருந்து பசுப்பாலை எதிர்பார்ப்பதற்கு ஒப்பானதாகும்.**

# சர்வதேச நீதிமன்றம் அமைக்கப்பட்டால் குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கத் தயார்

## செல்வராஜா கஜேந்திரன் தெரிவிப்பு



ஜனாதிபதி என்பதால் செய்த படுகொலைகளும் குற்றங்களும் மறைந்து விடாது. துணிச்சல் இருந்தால் சர்வதேச குற்றவியல் விசாரணைக்கு வாருங்கள் நிரூபித்து காட்டுகின்றோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர் –

தமிழர்களின் பொருளாதாரத்தை அழித்து தென்னிலங்கையை சேர்ந்தவர்களின் பொருளாதாரத்தை மாத்திரம் நோக்கமாகக் கொண்டு செயற்படுவதை இந்த அரசு நிறுத்த வேண்டும்.– என்றார்.

# வீட்டுக்கு ஒரு முருங்கை மரம் வளர்ப்போம் மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

நாட்டு மக்கள் அனைவரும் வீட்டுக்கு ஒரு முருங்கை மரம் வளர்க்க வேண்டுமென அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரியுள்ளது.

எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டு காலத்தில் அனைவரும் உள்நாட்டு முருங்கை மரமொன்றை வளர்ப்பதற்கு முயற்சிப்பது உசிதமானது என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் அனுருத்த பாதெனிய இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

நாட்டின் சௌபாக்கியத்தையும் நாட்டு மக்களின் ஆரோக்கியத்தையும் உருவாக்குவதற்கு முருங்கை மரமொன்றை வளர்ப்போம் என அவர் கோரியுள்ளார்.

கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

முருங்கைக்காயை ஏற்றுமதி செய்கையாக மேற்கொண்டால் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சிக்கு தீர்வு எட்ட முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# விஞ்ஞான உயர் ஜனாதிபதி விருது தமிழர் ஒருவருக்குக் கிடைத்தது



விஞ்ஞான ஆய்வுக்கான மிக உயர்ந்த ஜனாதிபதி விருது தமிழரான கலாநிதி நவரட்ணராஜாவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் ஆய்வாளர்களுக்கு இலங்கையில் வழங்கப்படும் மிக உயர்ந்த விருதாக இந்த விருது கருதப்படுகின்றது.

சஞ்சிகையொன்றில் வெளியிடப்பட்ட ஆய்வுக் கட்டுரை ஒன்றுக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தேசிய ஆராய்ச்சி சபையால் கடந்த செவ்வாய்க்கிழமை இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. மெய்நிகர் தொழிநுட்பத்தின் ஊடாக இந்த விருது வழங்கும் நிகழ்வு நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடினமான பாதையைக் கடந்து வந்து இவ்வாறு விருது வென்றெடுப்பது அளவில்லா மகிழ்ச்சி அளிப்பதாகவும், இந்த தருணத்தில் தனது ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்து பாராட்டுவதாகவும் கலாநிதி நவரட்ணராஜா தனது முகநூல் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகம், தென்கிழக்கு பல்கலைக்கழகம் என்பனவற்றில் விரிவுரையாளராகக் கடமையாற்றியுள்ள கலாநிதி நவரட்ணராஜா தற்பொழுது பேராதனை பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராக கடமையாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. கலாநிதி நவரட்ணராஜா டிக்கோயா போர் டைஸ் தமிழ் வித்தியாலயம், புளியாவத்தை தமிழ் மகா வித்தியாலயம் மற்றும் ஹற்றன் ஹைலன்ட்ஸ் மத்திய கல்லூரி என்பனவற் றின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 209 பேர் குணமடைவு

*இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களுள் நேற்று புதன்கிழமை மேலும் 209 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.*

*இதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களில் 90 ஆயிரத்து 917 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.*

*இதேவேளை, கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 588 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.*

# சுத்திகரிக்காத தேங்காயெண்ணெய் கொள்கலன் ஏப்ரல் 13 இல் மலேசியாவுக்கு மீள் ஏற்றுமதியாகும்

புற்றுநோயை ஏற்படுத்தும் திரவம் இருப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ள தேங்காய் எண்ணெயின் ஆறு கொள்கலன்களும் 13 ஆம் திகதி மலேசியாவுக்கு அனுப்பப்படும் என இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு மீள் ஏற்றுமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெயின் மதிப்பு 37.7 கோடி ரூபாவுக்கும் அதிகமாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

105 மெற்றிக் தொன் எடையுள்ள தேங்காய் எண்ணெயை மீள் ஏற்றுமதிகாக கொழும்பு துறைமுக புறப்பாடு முனையத்துக்கு கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் கொண்டு செல்லப்பட்டது.

தனியார் நிறுவனங்களால் இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் கொள்கலன்களில் எப்லடொக்சின் என்ற புற்றுநோயை ஏற்படுத்தும் பதார்த்தம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து, உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பாம் எண்ணெய் இறக்குமதிக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தடை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கொரோனா அலை உருவாகும் மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்

## அரசாங்கம் எச்சரிக்கை



புத்தாண்டுக் கொண்டாட்டங்களின் போது மக்கள் சுகாதாரப் பாதுகாப்பு விதிமுறைகளை முறையாக பின்பற்றாவிடின் புதியதோர் அலை உருவாகக் கூடும்.

எனவே மக்கள் அசமந்தப் போக்குடன் செயற்படக் கூடாது. மக்களின் செயற்பாடுகள் தொடர்பில் தொடர்ந்தும் கண்காணிக்குமாறு பொலிஸார் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

புத்தாண்டுக் கொண்டாட்டங்களின் போது எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் விசேட சுற்று நிரூபம் வெளியிடப்பட்டுள்ளது.

அத்தோடு இது தொடர்பில் பொலிஸார், பொது சுகாதாரப் பரிசோதகர்கள் தொடர்ந்தும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

புத்தாண்டுக் காலத்தில் எவருக்கேனும் தொற்று ஏற்படுமாயின் தொற்றாளர்களுடன் தொடர்பைப் பேணிய முதலாம் மற்றும் இரண்டாம் தொடர்பாளர்களை இனங்காண்பது மிகக் கடினமானதாகும். எனவே தான் புத்தாண்டுக் கொண்டாட்டத்தின் போது எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பான சுற்று நிரூபம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய வரையறைகளைப் பின்பற்றி சுகாதாரப் பாதுகாப்பு விதிமுறைகளுடன் புத்தாண்டைக் கொண்டாடுமாறு நாட்டு மக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

அத்தோடு பொது மக்களின் நடவடிக்கைகள் தொடர்பில் தொடர்ந்தும் கண்காணிக்குமாறு பொலிஸார் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் கொவிட் பரவல் தொடர்பில் அசமந்தப் போக்குடன் செயற்பட்டு வழமையைப் போன்று கொண்டாட முற்பட்டால் புதிய அலை உருவாகக் கூடும். எனவே பொது மக்கள் மிகுந்த பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்று கோருகின்றோம். – என்றார்.

# மூடப்பட்ட மதுபான சாலையைத் திறக்க ஊர்காவற்துறையில் எதிர்ப்பு தெரிவிப்பு

ஊர்காவற்துறைப் பகுதியில் இயங்கி வந்த மதுபான சாலை மூடப்பட்ட நிலையில் அதனை மீளத் திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு தீவக சிவில் சமூக அமைப்பு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

குறித்த அமைப்பு அது தொடர்பில் ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில் –

ஊர்காவற்துறை பிரதான சாலையில் இயங்கி வந்த மதுபானசாலை தீவக சிவில் சமூக அமைப்பு, பாடசாலை சமூகம் ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலை நிர்வாகம் உள்ளிட்ட அமைப்புக்கள் மற்றும் பிரதேச மக்களின் எதிர்ப்பையடுத்து கடந்த 2016 ஆம் ஆண்டு மூடப்பட்டது.

இந்நிலையில், தற்போது ஊர்காவற்துறை பிரதேச செயலாளரால் பொது மக்களுக்கு விடுக்கப்பட்ட அறிவித்தலில் , கடந்த காலத்தில் ஊர்காவற்துறை சுங்க வீதியில் இயங்கிய மதுபான சாலையை மீள செயற்படுத்துவதற்காக ஊர்காவற்துறை சுருவில் வீதியில் உள்ள காணியைத் தெரிவு செய்துள்ளனர்.

எனவே அதற்கான அனுமதியை வழங்குவது தொடர்பாக பிரதேச மக்களின் கருத்துக்களை 29.03.2021 ஆம் திகதியிலிருந்து 14 நாள்களுக்குள் கிராம உத்தியோகத்தர் ஊடாக எமக்குத் அறியத் தருமாறு கேட்டுக் கொள்கிறோம். என உள்ளது.

அறிவித்தலில் குறித்த மதுபானசாலை முன்னர் எதற்காக மூடப்பட்டது என்பது தொடர்பான எந்த விவரங்களும் தெரியப்படுத்தப்படாது இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளது. இயங்கிக்கொண்டு இருக்கும் மதுபான சாலையை பிறிதோர் இடத்துக்கு மாற்றம் செய்வது போன்ற மாயையை ஏற்படுத்தி மீள திறக்க அனுமதி கோருகின்றனர்.

2019ஆம் ஆண்டு காலப் பகுதியில் இந்த மதுபான சாலை அனுமதியை வைத்திருந்தவர்கள் அதனை மீளத் திறப்பதற்கு அனுமதி கோரி பிரதேச செயலாளர் ஊடாக ஊர்காவற்துறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரியிருந்த போதிலும் அதற்கான அனுமதி வழங்கப்படவில்லை.

ஊர்காவற்துறை பொலிஸ் நிலைய குற்றவியல் வருடாந்த அறிக்கையின்படி 2016 இற்குப் பின்னரான காலப்பகுதியில் குடும்ப வன்முறை, கோஷ்டி மோதல்கள் மற்றும் வன்முறைகள் கணிசமான வீழச்சியைக் கண்டிருந்தது.

அதற்கு குறித்த மதுபான சாலை மூடப்பட்டிருந்ததும் ஒரு முக்கிய காரணமென நம்புகிறோம். அது மட்டுமல்ல மதுபான சாலைக்குப் புத்துயிரளிக்கும் இந்தச் சமூக விரோதச் செயலின் பின்னணியில் முக்கிய அரசியல் பிரமுகர்கள் இருப்பதாகவும் நாம் சந்தேகமடைகிறோம்.

இந்தச் சமூக அழிவை ஏற்படுத்தக் கூடிய மது பான சாலை திறப்பை எதிர்த்து இன்று (வியாழக்கிழமை) காலை 10 மணியளவில் ஊர்காவற்துறை பிரதேச செயலகம் முன்றிலில் எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளோம்.

அதில் மக்கள் நலனில் அக்கறை கொண்டவர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறும் தீவக சிவில் சமூக அமைப்பினர் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். – எனத் தெரிவித்தார்.

# சூதாட்டத்தில் ஈடுபட்ட ஐந்து சீனர்கள் கைது

## பம்பலப்பிட்டி பகுதியில் சம்பவம்

பம்பலப்பிட்டி, லோரிஸ் வீதிப் பகுதியில் அமைந்துள்ள சட்டவிரோத சூதாட்ட விடுதியொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது ஐந்து சீனப் பிரஜைகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொள்ளுபிட்டி மற்றும் பம்பலப்பிட்டி பொலிஸார் இணைந்து நடத்திய சோதனை நடவடிக்கையின்போது இவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 88 லட்சத்து 500 ரூபா ரொக்கப் பணமும், 2 ஆயிரத்து 600 யுவானும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இந் நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பம்பலபிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மத்தள சர்வதேச விமான நிலையம் ஊடாக 44 கோடியே 50 லட்சம் ரூபா வருமானம்



மத்தள சர்வதேச விமான நிலையம் கடந்த நவம்பர் மாதம் திறக்கப்பட்டதில் இருந்து இதுவரை 44 கோடியே 53 லட்சத்து 19 ஆயிரத்து 656 ரூபா சம்பாதிக்கப்பட்டுள்ளது என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி உறுப்பினர் ஹேஷ விதானகே எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், விமான நிலையத்துக்கு செலவிடப்பட்ட தொகை 24 யோடியே 70 லட்சத்து 70 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் என கூறினார்.

மேலும் மத்தள சர்வதேச விமான நிலையம் திறக்கப்பட்டதில் இருந்து இதுவரை 10 ஆயிரத்து 206 விமானங்கள் தரையிறங்கியுள்ளன எனவும் அமைச்சர் பிரசன்னரணதுங்க குறிப்பிட்டார்.

2013 இல் திறக்கப்பட்ட குறித்த விமான நிலையத்தில் 2020 நவம்பர் வரை 58 ஆயிரத்து 651 பேர் வருகைதந்துள்ளனர் என்றும் 73 ஆயிரத்து 513 பேர் பயணங்களை மேற்கொண்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

# பாம் எண்ணெய்க்குத் தடை விதிப்பால் பிரமிட் வில்மார் நிறுவனத்துக்கே இலாபம்

## 800 கோடி பெறுகிறது என்கிறார் நளின் பண்டார



கொழும்பு, ஏப்.08

பாம் ஒயில் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால் சீனி வரி மோசடியுடன் தொடர்புடைய பிரமிட் வில்மார் நிறுவனம் 800 கோடி மேலதிக இலாபம் பெற்று வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

2020 இல் தேங்காய் எண்ணெய் இறக்குமதி தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் விடுத்தனர். விலை குறைப்பால் வியாபாரிகளுக்கு இலாபம் பெற்றுக் கொடுக்கவே இத்திட்டம்.

வில்மார் நிறுவனத்தின் களஞ்சியத்தில் தற்போது 8 ஆயிரம் மெற்றிக் தொன் தேங்காய் எண்ணெய் இருப்பில் உள்ளதாக எமக்கு தகவல் கிடைத்துள்ளது.

பாம் ஒயில் இறக்குமதி தடை விதிக்கப்பட்டதால் என்ன நடந்துள்ளது? 485 ரூபாவிற்கு இருந்த தேங்காய் எண்ணெய் 580, 600 ரூபாவிற்கு அதிகரித்துள்ளது. எனவே ஒரு தொன் தேங்காய் எண்ணெய்க்கு 50 ஆயிரம் தொடக்கம் ஒரு லட்சம் வரை இலாபம் ஏற்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் நிலையான கொள்கை இல்லாத காரணத்தால் வியாபாரிகள் கொடிகட்டிப் பறக்கின்றனர். சந்தைகள் இன்று வியாபாரிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது' என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பாம் ஒயிலுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த திங்கட்கிழமை இறக்குமதிக்கான தடையை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நுண்கடன்களையும் ரத்துச் செய்க ஹிங்குராக்கொடையில் கவனவீர்ப்பு




அனைத்து நுண்கடன்களையும் ரத்துச் செய்யக்கோரி ஹிங்குராக்கொடையில் மாபெரும் கவன ஈர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை வடக்கு, கிழக்கு உட்பட இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து ஒன்றுகூடிய மக்கள் இந்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் உட்பட பல்வேறு பொது அமைப்புகள் இணைந்து இந்த போராட்டத்தை முன்னெடுத்தது.

இதன்போது ஹிங்குராக்கொடை பிரதான வீதியூடாக கவனவீர்ப்புப் பேரணி முன்னெடுக்கப்பட்டதன் காரணமாக குறித்த வீதியின் போக்குவரத்துகள் சில மணி நேரம் பாதிக்கப்பட்டன.

நுண்கடனால் தினமும் பெருமளவான பெண்கள் தற்கொலைசெய்துகொள்ளும் நிலைக்குச் செல்வதன் காரணமாக நுண்கடன் திட்டத்தை ரத்துச்செய்யவேண்டும் என இதன் போது கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

பெண்களைப் பாதுகாப்பதற்காக அரசாங்கம் இந்த நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்கவேண்டும் எனவும் இதன்போது கோரிக்கை விடுக்கப்படட்டன.

நுண்கடன் திட்டத்தினை ரத்துச்செய்யக் கோரும் வகையிலான பதாகைகளை ஏந்தியிருந்ததுடன் அது தொடர்பான கோஷங்களையும் போராட்டத்தில் ஈடுபட்டவாகள் எழுப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# நல்லாட்சியில் பொலிஸ் திணைக்களம் பொறுப்புடன் செயலாற்றவில்லையாம்!

## குற்றஞ்சாட்டுகிறார் அமைச்சர் சமல்



நல்லாட்சி அரசாங்கத்தில் பொலிஸ் திணைக்களம் சிறந்த முறையில் பொறுப்புடன் செயற்பட்டிருந்தால் ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் இடம் பெற்றிருக்காது.

அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தியுள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை முன்னெடுக்க அமைச்சரவை உபகுழு பணிப்புரை விடுத்துள்ளது.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் குடும்பத்தில் 18 வயதுக்கும் குறைவான பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கைகளுக்கு உதவி செய்ய யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என நீர்பாசனம், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையைப் பரிசீலனை செய்த அமைச்சரவை உபகுழுவின் அறிக்கை தொடர்பில் தெளிவுப்படுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு கடந்த செவ்வாய்க்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம் பெற்றது.

இதன் போது கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்க வேண்டிய அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டது.

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை மீள் பரிசீலனை செய்த அமைச்சரவை உபகுழுவின் அறிக்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கடந்த செவ்வாய்க்கிழமை கையளிக்கப்பட்டது.

உயிர்த்த ஞாயிறுதின குண்டுத் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கை மற்றும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தேசியப் பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வை குழுவின் அறிக்கை என்பவற்றைப் பரிசீலனை செய்து அது தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டிருந்த அமைச்சரவை உப குழுவின் இறுதி யோசனைகள் இவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறுதின குண்டுதாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கையை விரிவாக ஆராய்ந்த குழு 78 பரிந்துரைகளை அடையாளம் கண்டுள்ளது. அந்த பரிந்துரைகளை எவ்வாறு நடைமுறைப் படுத்துவது, எந்த நிறுவனம் ஊடாக நடைமுறைப் படுத்துவது என்பது தொடர்பான விடயங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன. சட்டரீதியிலான பரிந்துரைகளை ஜனாதிபதி இதற்கு முன்னர் சட்டமா அதிபருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இலங்கையில் இஸ்லாமிய தேசத்தை உருவாக்கும் நோக்கில் ஒரு தரப்பினர் சிரியாவில் சிறப்பு பயிற்சி பெற்றுள்ளார்கள் என 2016 ஆம் ஆண்டு அப்போதைய நீதியமைச்சராகக் கடமையாற்றிய விஜயதாஸ ராஜபக்ஷ நாடாளுமன்றில் சிறப்பு உரையாற்றினார்.

இவரது உரைக்கு நாடாளுமன்றிலும், ஊடக சந்திப்பிலும் ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள். இவரது கருத்து தொடர்பிலும், இவர் குறிப்பிட்ட கருத்துக்கு எதிராகக் குறிப்பிடப்பட்ட கருத்து தொடர்பிலும் அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கை என்ன ?

2018 ஆண்டு ஆண்டு டிசெம்பர் மாதம் 23 ஆம் திகதி மாவனெல்லை புத்தர் சிலை உடைப்பு விவகாரம் இடம்பெற்றது. இந்தச் சம்பவம் தொடர்பில் கேகாலை பொலிஸ் அதிகாரி கமல் பெரேரா முழுமையான விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். புத்தர் சிலை உடைப்பு விவகாரம் விசாரணை எவ்வாறு தடைப்பட்டது என்பவை மீள ஆராயப்பட வேண்டும்.

2019 ஆம் ஆண்டு புத்தளம் வனாத்தவில்லு பகுதியில் பெருந்தொகையான வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்டு, நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் இருவர் ஜனாதிபதியின் உத்தரவின் பெயரில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள் . ஜனாதிபதி இவர்களை விடுதலை செய்தாரா அல்லது விடுதலைக்கான முயற்சிகளில் ஏதேனும் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளனவா?

பயங்கரவாதி சஹ்ரானைக் கைது செய்யுமாறு 2015 ஆம் ஆண்டு தொடக்கம் ஜனாதிபதி செயலகம், சட்டமா அதிபர் திணைக்களம் என உயர்மட்டத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

காத்தான்குடி பிரதேசத்தில் மத முரண்பாடுகள் தலைத்தூக்கியுள்ளன ஆகவே பயங்கரவாதி சஹ்ரானைக் கைது செய்யுமாறு சாதாரண முஸ்லிம் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். இந்த விடயம் தொடர்பில் பாதுகாப்புத்தரப்பினரும், குறிப்பாக காத்தான்குடி பொலிஸாரும் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

நாட்டில் இஸ்லாமிய அடிப்படைவாதம் தலைதூக்கியுள்ளது என்பதை பொலிஸார் நன்கு அறிந்துள்ளனர். ஆனால் எவ்வித நடவடிக்கைகளையும் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் இடம் பெறும் வரை முன்னெடுக்கவில்லை.

பொறுப்பில் இருந்து பொலிஸ் அதிகாரிகள் அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தியுள்ளமை அறிக்கைகள் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது அவசியமாகும்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத்தில் 18 வயதுக்கும் குறைவான வயதினையுடைய பிள்ளைகள் இருப்பார்களாயின் அவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு உதவி செய்ய யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கையின் உள்ளடக்கத்தை விரைவாக செயற்படுத்துவது தொடர்பில் விடயதானங்களுக்குப் பொறுப்பான அமைச்சுக்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. – என்றார்.

## ஒரு லட்சம் ரஷ்ய தடுப்பூசி 12ஆம் திகதி கிடைக்கும்

### அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தகவல்

ஸ்புட்னிக் ஏ தடுப்பூசிகளில் ஒரு லட்சம் தடுப்பூசிகள் எதிர்வரும் 12 ஆம் திகதி நாட்டுக்குக் கிடைக்கவுள்ளன என அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவிடம் முற்பதிவு செய்யப்பட்ட 7 லட்சம் தடுப்பூசிகளின் முதற் தொகுதியே இவ்வாறு கிடைக்கவுள்ளன என அந்தக் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் தினு தசநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

ஏனையவற்றை மாதாந்தம் நாட்டுக்கு வழங்குவதற்கு அந்த நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது. இவற்றில் முதலாம் மற்றும் இரண்டாம் தடுப்பூசிகளே எதிர்வரும் 12 ஆம் திகதி கிடைக்கவுள்ளன.

இதேவேளை, ஏற்கனவே முற்பதிவு செய்யப்பட்டுள்ள 10 லட்சம் அஸ்ட்ராஜெனெக்கா தடுப்பூசிகளை நாட்டுக்கு வழங்கும் திகதி தொடர்பாக இதுவரை அறிவிக்கப்படவில்லை என்றும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

## தடுப்பூசி ஏற்றுமதியில் அதிக தாமதம் ஏற்படும் என சீரம் நிறுவனம் அறிவிப்பு

கொழும்பு, ஏப்.08

இந்தியாவில் கொரோனா நோய்த்தொற்றின் பாதிப்பு அதிகரித்தால் தடுப்பூசி ஏற்றுமதியில் அதிக தாமதம் ஏற்படும் என சீரம் நிறுவனம் எச்சரித்துள்ளது.

சீரம்நிறுவனத்தின்தலைமை நிர்வாகி ஆதார் பூனவல்லா, நாட்டில் புதிய கொரோனா வைரஸ் நோய்த்தொற்றுகள் குறைந்துவிட்டால், ஜூன் மாதத்திற்குள் அஸ்ட்ராஜெனெகா அளவுகளின் ஏற்றுமதியை மீண்டும் தொடங்க முடியும் என கூறியுள்ளார்.

இருப்பினும் நோய்த்தொற்றுகள் தொடர்ந்து அதிகரிப்பதால் அதிக தாமதங்கள் ஏற்படக் கூடும் என்று அவர் எச்சரித்தார்.

ஏனெனில் இந்திய சீரம் நிறுவனம் உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறிருப்பினும் இலங்கைக்கான அடுத்த தடுப்பூசிகளைப் பெறுவதற்காக முடிந்த வரை விரைவாக முயற்சித்து விரைவுபடுத்த இந்திய அரசு மற்றும் சீரம் இன்ஸ்டிடியூட் நிறுவனத்துடன் இணைந்து செயற்பட்டு வருவதாக இலங்கையில் உள்ள யுனிசெப்பின் துணை பிரதிநிதி எம்மா ப்ரிகாம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெட்டுக்காயங்களுடன் சடலம் கல்கிசைப் பகுதியில் மீட்பு

கொழும்பு, ஏப்.08

கொழும்பு, கல்கிசைப் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றிலிருந்து வெட்டுக் காயங்களுடன் சடலமொன்று நேற்று புதன்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்த இளைஞர் 22 வயதுடைய கல்கிசைப் பகுதியில் வசிப்பவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந் நிலையில் உயிரிழந்த நபரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக களுபோவில போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய சந்தேக நபர்களைக் கைதுசெய்ய மவுண்ட் லவ்னியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பிக்குகளிடம் லஞ்சம் பெற முயன்ற இருவர் கைது!

மொறட்டுவ பகுதியில் அமைந்துள்ள விகாரையொன்றின் பிக்குவிடமிருந்து 25 லட்சம் ரூபா பணத்தை லஞ்சமாக பெற முயன்ற குற்றச்சாட்டுக்காக இருவரை கொழும்பு, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் கோரிய பணத் தொகையிலிருந்து ஆரம்ப கட்டமாக 5 லட்சம் ரூபாவைப் பெற முயன்றபோது கடந்த செவ்வாய்க்கிழமை இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந் நிலையில் கைதான சந்தேக நபர்களை மொறட்டுவை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

## குடும்ப விவரங்கள் திரட்டும் பொலிஸார்: அச்சத்தில் வவுனியா பிரதேச மக்கள்

வவுனியா பூந்தோட்டம் பகுதிகளில் வசித்து வரும் பொதுமக்களின் வீடுகளுக்கு சென்ற பொலிஸார் அங்கு தங்கியுள்ள குடும்ப உறுப்பினர்களின் விவரங்களைத் திரட்டும் படிவம் ஒன்றை வழங்கிவிட்டு சென்றமையுடன் இரு தினங்களில் அவற்றை பெற்றுக்கொள்வதற்கு வருகை தருவோம் எனவும் குடும்ப விவரங்களில் உள்ளடக்கப்பட்ட விவரங்களை வழங்குமாறும் கூறியுள்ளனர்.

எவ்விதமாகத் தெளிவுபடுத்தும் அறிவுறுத்தல்கள் மற்றும் காரணங்கள் எதுவும் தெரிவிக்கப்படாமல் இவ்வாறு குடும்ப விவரங்களைக் கோருகின்றமையால் பொது மக்கள் மத்தியில் ஓர் அச்ச நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருகையில் -

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் பூந்தோட்டம் பகுதியில் வசிக்கும் மக்களிடம் சென்ற பொலிஸார் வீடுகளில் வசிப்பவர்களின் பெயர், முகவரி, தொழில், தேசிய அடையாள அட்டையின் இலக்கம், தொலைபேசி இலக்கம் போன்ற முக்கிய தகவல்களைக் கோரிய விண்ணப்பப்படிவம் ஒன்றை வழங்கி வருவதுடன் அந்த விவரங்களைச் சேகரிப்பதற்கு மீண்டும் வருகை தரவுள்ளனர் எனவும் அப்படிவத்தில் கேட்கப்பட்டுள்ள விவரங்களை நிரப்பி கையளிக்குமாறும் அறிவுறுத்தல்களை வழங்கிவிட்டு சென்றுள்ளனர் .

இவ்வாறு பொலிஸாரால் குடும்ப விவரங்கள் சேகரிப்பதற்குக் காரணங்கள் தெரியாமல் மக்கள் மத்தியில் ஓர் அச்ச நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளதாகவும் பொது மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்று இல்லாதவர்களின் கடைகளை யாழ்ப்பாணத்தில் திறப்பதற்கு அனுமதி



யாழ். நகர வர்த்தகர்களிடம் பெறப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளா னோரின் கடைகள் தவிர்ந்த ஏனைய கடைகளை இன்று (வியாழக்கிழமை) திறக்க அனுமதி வழங்கியுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

கொரோனாநிலைமைகள்தொடர்பாகஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

கடந்த 26 ஆம் திகதி முதல் யாழ் நகரத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு வர்த்தக நிலையங்களில் பணியாற்றுவோர் தனிமைப்படுத்தலுக்குள்ளாக்கப்பட்ட நிலையில் கடந்த 14 நாள்களாக மேற்கொள்ளப்பட்ட இரண்டு பி.சி.ஆர். பரிசோதனைகளில்தொற்று இனங்காணப்பட்டோரின் கடைகள் தவிர்ந்தஏனைய கடைகளை இன்று (வியாழக்கிழமை) காலை முதல் திறப்பதற்கு அனுமதிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை அவசரமாக கூடிய யாழ். மாவட்ட கொரோனாத் தடுப்பு செயலணியில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதாக வர்த்தகர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் தொற்று உறுதி செய்யப்பட்டோர் தவிர்ந்த ஏனையோரின் கடைகளை இன்று முதல் திறப்பதற்கு அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் தற்போது பண்டிகைக் காலம் என்பதால் மக்கள் வழமை போன்று ஒன்று கூடல் செயற்பாடுகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவேண்டும் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

அத்தோடு யாழ் நகரப் பகுதிகளில் வீதித் தடைகளை ஏற்படுத்தி பொதுமக்களை ஒன்று கூடாத வண்ணம் செயற்படவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது, அத்தோடு தற்போது அபாய நிலை இன்னும் நீங்கவில்லை எனவே தற்போதைய நிலையில் பொதுமக்களின் ஒன்றுகூடலை தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க உள்ளதாகவும்' – அவர் தெரிவித்தார்.

# கிராமிய மட்ட உற்பத்திகளின் கண்காட்சி மட்டக்களப்பில்

மட்டக்களப்பு, ஏப்.08

நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்தின் கீழ் கிராமிய மட்ட உற்பத்தியாளர்களின் கண்காட்சி நேற்று புதன்கிழமை மட்டக்களப்பு, மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்தின் கீழ் கிராம மட்ட சிறு உற்பத்தியாளர்களின் மேம்பாட்டுக்காக அரசாங்கம் பல்வேறு உதவித் திட்டங்களை முன்னெடுத்துவருவதுடன் அவர்களுக்கான சந்தை வசதிகளையும் ஏற்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

இதன்கீழ் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட சிறு உற்பத்தியாளர்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கும் வகையில் இந்த சந்தை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வ.வாசுதேவன் தலைமையில் ஆரம்பமான இந்த கண்காட்சியில் மட்டக்களப்பு மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதியாக உதவி பிரதேச செயலாளர்



திருமதி ல.பிரசாந்தன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் அ.சுதர்சன், சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு மேற்பார்வை உத்தியோகத்தர் சி.விநோத் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

சிறுதொழில் முயற்சிப் பிரிவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கண்காட்சியில் பல்வேறு உற்பத்திப் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தமையுடன் விற்பனையும் நடைபெற்றது.

புத்தாண்டுக் காலம் என்ற காரணத்தால் மக்கள் குறைந்த விலையில் தரமான பொருள்களைக் கொள்வனவு செய்யும் வகையிலும் இந்த உற்பத்திச் சந்தை ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.

# இரவு வீட்டுக்குள் புகுந்து மர்மக் கும்பல் அட்டகாசம்

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா மூன்றுமுறிப்புப் பகுதியில் உள்ள வீடொன்றிற்குள் நுழைந்த மர்மக் குழுவினர் வீட்டில் இருந்தவர்களை அச்சுறுத்தியதுடன், தளபாடங்களையும் சேதப்படுத்திவிட்டு சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணியளவிலேயே மர்மக் கும்பல் வீட்டுக்குள் வாள்களுடன் நுழைந்து அட்டகாசம் செய்துள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரியவருகையில் –

மர்மக் குழுவினர் தாக்குதல் மேற்கொண்ட வீட்டுவளாகத்தில் வாடகைக்கு வசித்துவரும் இளைஞரையும், யுவதியையும் தேடியதுடன், அவர்களைக் காணாத நிலையில் வீட்டின் உரிமையாளர்களை அச்சுறுத்தி, வீட்டு தளவாடங்களையும் சேதப்படுத்திவிட்டு சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக வீட்டு உரிமையாளரால் வவுனியா பொலிஸாருக்கு முறைப்பாடு அளிக்கப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, யாழில் இருந்து வருகைதந்த நபர்களே குறித்த தாக்குதலை முன்னெடுத்துள்ளனர் எனவும், காதல் விவகாரம் இதற்குக் காரணமாக இருக்கலாம் என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியப் பிரஜையின் மரணம்; சந்தேகம் கொள்ளும் ஜே.வி.பி.



குளியாப்பிட்டியில் புத்தர் சிலையை சேதப்படுத்திய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இந்திய பிரஜை உயிரிழந்தமை சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள அவர் இந்திய பிரஜையின் உயிரிழப்பு காரணமாக பல முக்கிய விவரங்கள் வெளியில் தெரியவராமல் போகலாம்.

இந்தியப் பிரஜையின் உயிரிழப்புத் தொடர்பாக அரசாங்கம் வெளிப்படையான விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

குளியாப்பிட்டியில் புத்தரின் சிலைகளை சேதப்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்ட நபர் சுவாசப் பிரச்சினைகளை எதிர்கொண்டமையால் வாரியபொல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

குளியாப்பிட்டியில் பல சிலைகளை சேதப்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் 19ஆம் திகதி அவர் கைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு ஓட்டமாவடியில் சிரமதானப் பணிகள்

ஓட்டமாவடி கல்விக் கோட்டத்துக்குட்பட்ட ஓட்டமாவடி தேசிய பாடசாலையின் சுற்றுப் புறச்சூழலின் சுத்தத்தைப் பேணி, கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு உதவும் வகையில் சிரமதானப்பணி நேற்று (புதன்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

இம்முறை சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றிய (2020ஆம்ஆண்டு)மாணவர்களால்பாடசாலையின் அதிபர் ஏ.எம்.ஹலீம் இஸ்ஹாக் மேற்பார்வையில் இடம்பெற்ற இந்தச் சிரமதானப் பணியில் வகுப்பறைச் சூழலிலும், பாடசாலை வளாகத்திலும் காணப்பட்ட குப்பைகள் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டன.

இந்தப் பணிக்கு ஓட்டமாவடி பிரதேச சபையின் திண்மக்கழிவகற்றல் பணியாளர்களும் பூரண ஒத்துழைப்புக்களை வழங்கினர்.

தாமாக முன்வந்து முன்மாதிரிமிக்க இப்பணியை மேற்கொண்ட இம்முறை க.பொ.த சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றிய (2020 ஆம் ஆண்டு) மாணவர்கள், இதற்கான ஒழுங்கமைப்பை மேற்கொண்ட பாடசாலையின் ஒழுக்கக் கட்டுப்பாட்டுக்குழு பொறுப்பாசிரியர் ஏ.ஜி.அஸீஸுல் றஹீம் மற்றும் ஒத்துழைப்பு வழங்கிய ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர், சுகாதாரப் பிரிவினர், திண்மக்கழிவகற்றல் ஊழியர்களுக்கும் பாடசாலைச் சமூகம் சார்பில் அதிபர் ஏ.எம். ஹலீம் இஸ்ஹாக் நன்றி தெரிவித்தார்.

# போதைப்பொருளைக் கொள்வனவு செய்வதற்காக சேவல் தொடக்கம் தங்க ஆபரணங்கள் கொள்ளை

மட்டக்களப்பில், போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகிய இளைஞர் குழுவொன்று, போதைப் பொருளைக் கொள்வனவு செய்வதற்காக, வீடுகளை உடைத்து சேவல் தொடக்கம் தங்க ஆபரணங்கள் வரை கொள்ளையிட்டு வந்துள்ள குற்றச்சாட்டில் 6 இளைஞர்கள், நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர் என மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்களிடமிருந்து ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் கொள்ளையிட்ட சேவல், மரங்கள் வெட்டும் இயந்திரம், மாபிள் வெட்டும் இயந்திரம், தொலைபேசிகள் மற்றும் பென்ரைவ் உள்ளிட்ட பொருள்களை மீட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நாவற்கேணி, இருதயபுரம் மற்றும் ஊறணி போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த 18,19,20,21, 24 வயதுகளையுடைய இளைஞர்களையே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களில் நால்வர் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், இருவர் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள், போதைப் பொருள் பாவனைக்காக திருடப்பட்ட பொருள்களை விற்று, தினமும் 2,000 ரூபா வரை செலவு செய்துள்ளனர் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# ஜனநாயகம்:

# நாடாளுமன்றத்தின் மேலாதிக்கமா? அல்லது சீருடை அதிகாரிகளினதா?



சா. இரத்தினஜீவன் ஹூல்

"நாமும் ஒரு ஜனநாயகம் என்கிறோம். ஒரு ஜன நாயகத்தில் நாடாளுமன்றத்திற்கே மேலாதிக்கமாம். அப்படி என்றால் ஆமிக்காரரை கண்டு நடுங்கு வோமா? நாடாளுமன்றம் அமைத்த மனித உரிமை ஆணைக்குழு இப்படி ஒரு கேலிக் கூத்தாகுமா? நாடாளுமன்றம் அமைத்த 13 ஆம்சீர்திருத்தத்தின் கீழ் பொலிஸ்காரரும் எம் காணிகளும் எமக்குக்கீழ்தான். பொலிஸார் எம்முடன் தமிழில் பேச நாம் அவர்களை கண்டு நடுங்க வேண்டியதுமில்லை, அவர்களுக்கு வரிசையில் இடங்கொடுக்க வேண்டியது மில்லை."

**எரிபொருள் வரிசை**

நான் கடந்த சனியன்று (03.04. 2020) மணிக்கூட்டுக் கோபுரத்தெரு எரிபொருள் நிரப்புமிடத்திற்கு என் ஸ்கூட்டரில் சென்றிருந்தேன். பம்பிற்கு என் பக்கம் ஒரு வாகனத்திற்கு எரி பொருள் நிரப்பப்படவும், அதன் பின் ஒரு முச்சக்கர வண்டியும் அதன் பின் நானும் இருந்தோம். அப்போது ஒரு பொலிஸ் வாகனம் வந்து அவசரப்பட்டு ஊதுகுழலடிக்க, எரிபொருள்சாலை ஊழியன் எம்மை வழிவிடக்கட்டளை யிட்டான். நான் அசையவில்லை. என் முன் நின்ற இரு வாகனங்களும் நகர்ந் ததும் நான் முன் வந்தேன். ஊழியக்காரன் 'ஓ.ஐ.சீ இன் வாகனம் வழிவிடும்' என்று என்னை அதட்டி னான். அவரும் வரிசையில் வரட்டும் என்றேன். பம்பிற்கு மறு பக்கம் இருந்த காரிலுள்ள பலரும் சிரித்து தலையை ஆட்டி அது தான் சரி என்றனர். அதனுடன் ஓ.ஐ.சியின் காரும் பின்சென்று வந்த எரி பொருளை வாங்காது போய் விட்டது.

**காகில்ஸ் வாகன நிறுத்தம்**

நான் பிடிவாதமாய் நின்றதற்கு மூன்று காரணங் கள் இருந்தன.

முதலாவதாக, இரு வாரங்களுக்கு முன்பு அதே வீதியினதும் ஆஸ்பத்திரி வீதியினதும் சந்தியில், காகில்ஸ் சுப்ப மாகெட்டிற்கு நான் சென்ற போது வாசலிற்கு முன்பு ஓர் இராணுவ வாகனமொன்று முழு வாசலையும் தடை செய்தபடி நிறுத்தப்பட்டிருந் ததை கண்டு வாசல் காவலாளரை வினவினேன். "இப்போதுதான் உங்கள் சகஊழியன் என்னை இவ்வழியே வாரும், இப்படி நிறுத்தும் என்றெல்லாம் ஒரு ஒழுக்கத்தை நிலைநாட்டும் நோக்கத்தில் கட்டளையிட்டார். ஏன் இந்த ஆமி வாகனத்தை மட் டும் இப்படி அசிங்கமாகவும், மனிதருக்கு இடைஞ் சலாகவும் நிறுத்த விட்டிருக்கிறீர்கள்?" - என்று வின வினேன். அவர் என்னை உள்ளே பெரிய காவலா ளரை கேட்கச்சொல்ல, நானும் அப்படி கேட்க, அவர் அளித்த பதிலோ இது:- "காகில்ஸ் மேலாளர் இட்ட கட்டளையே. ஆமி வாகனங்களுக்கு அப்படி வாச லில்நிறுத்தவிடுங்கள்என்று. முறைப்படுவதென்றால் அவரிடமே முறைப்படுங்கள்."

நானோ அதிர்ந்து போனேன். ஏனென்றால் மேலாளரான நேசகுமார் பரி. யோவான் கல்லூரி யில் தலை நிமிர்ந்து நிற்கப் பழக்கப்பட்டவர், மேலும் கல்லூரியில் தலைமை வகித்து பழைய மாணவர் களை மகிமைப்படுத்துகிறவர். அவரையா இந்த யுத் தம் பொதுவாகப் படிக்காத சிங்கள இராணுவ வீரர்க ளுக்குப் பயந்து தலை குனிய வைத்தது? தமிழர் களை கேவலமாக அடிமைகளாக்கியுள்ளது?

**மனித உரிமை ஆணைக்குழுவும் அபாஸ் குடும்பமும்**

சீருடைகளை கண்டாலே தமிழராகிய எமது அடிமை நிலையை எனக்கு ஞாபகமூட்டும் மூன்றா வது சம்பவமும், அதையும் விட, கொடுமைப் படுத்தப் படும் நாமும் கொடியவர்களாக்கப்படுவோம் என் பதை காட்டும் சம்பவமும் அது.

இரண்டு வருடங்களுக்கு முன்பு, கிறிஸ்தவ தேவா லையங்களில் தீவிரவாதிகள் சிலர் ஈஸ்டரன்று குண் டுகள் போட்டதைத் தொடர்ந்து, இலங்கையில் அப் போது ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளிலிருந்து தஞ்சம் புகுந்த ஷியா முஸ்லிம் சிறுபான்மையினர் இலங்கையின் தெற்கிலுள்ள இனவாதிகளால் தாக் கப்பட்டனர். சந்தேஷமாகவும் பெருமையாகவும் கூறவேண்டியது, வடமாகாணம் மட்டுமே அவர்க ளுக்கு அப்போது பாதுகாப்பான இடமாய் இருந்தது. எமது வேதாகமம் பாரம்பரியத்தில் (லேவியாகமம் 19.34) கட்டளையிட்டபடி.

"உங்களிடத்தில்வாசம்பண்ணுகிறஅந்நியனைச் சுதேசிபோல எண்ணி, நீங்கள் உங்களிடத்தில் அன்பு கூருகிறது போல, அவனிலும் அன்பு கூருவீர் களாக. மேலதிகமாக, எமது நாட்டில் மூன்று நகரங் களை தஞ்ச நகரங்களாய் நியமித்து அவற்றை உட் புகும் தற்செயல் கொலைகாரர் உட்பட யாவருக்கும் தஞ்சம் கொடுக்கக் கட்டளையிடப்பட்டுள்ளோம் (லேவியாகமம் 19.34)."

இதற்கமையவே லட்சக்கணக்கான தமிழர் மேற் கைய நாடுகள் பலவற்றில் தஞ்சம் பெற்றுள்ளோம். ஆகவே திருச்சபை எம்மை கேட்க, பௌத்த குருமார் உட்பட வெறியர்களிடமிருந்து தப்பி வந்த, 4 சிறு பிள்ளைகள் கொண்ட அபாஸ் குடும்பம் யாழ்ப்பா ணத்திற்கு முதல் முதல் வந்த அகதிகளாக நல்லூரில் எமது வீட்டில் இறங்கினர். ஆனால் எமது கஷ்டப்பட்ட அதே சூழ் நிலையிலுள்ளவர்களோடு அனுதாபிக்க வேண்டியவர்களாய் இருக்கவேண்டிய எம்மில் சிலர், இவ்விடயத்தை அரசியல் மையப்படுத்தி, ஷியா அகதிகளின் வடக்கு வருகையை சிங்களவர் தம் பிரச்சினையை எம்மில் சுமத்துகிறார்களென்று விமர்சித்து எதிர்த்தார்கள்.

பொலிஸ் ஓ.ஐ.சியான ஃபெனான்டோவும் எம்மை பொலிஸ் நிலையத்திற்கு வரக் கட்டாயப் படுத்தினர். பின்பு ஆளுநராயிருந்த சுரேன் ராகவ னும், என்னையும் அகதிகளை என் வீட்டில் வைத்தி ருக்கக்கேட்ட அங்கிலிக்கன் திருச்சபை குரு முதல்வர் சாம் பொன்னையாவையும் அப்போது கலைந்தி ருந்த மாகாண பிரதமரின் கைதடி அலுவலகத்திற்கு தன்னை சந்திக்க வர கட்டளையிட்டார். அங்கு ராக வன் உடனடியாக அபாஸ் குடும்பம் தான் நியமித்த வவுனியாவிலுள்ள அகதி முகாமிற்குச்செல்லவேண் டுமென்று ஒரே பிடியாக நின்றதால் மனதில் ஒரு துளி இரக்கமும் இல்லாதவராக எனக்குப்பட்டார். அப் போது ராகவனை ஆளுநராய் நியமித்த ஜனாதிபதி அகதிகளை நாடு கடத்த வேண்டுமென்று சொன்ன கருணையற்ற காலம். ஒரு காலத்தில் இயேசு கிறிஸ் துவில்மறுபடியும்பிறந்தீராஎன்றுயூத்ஃபொக்ரைஸ்ட் என்ற அமெரிக்க நிறுவனத்தின் சார்பில் பலரையும் கேட்டுத் திரிந்த ராகவன், இன்று கையில் நூலையும் கட்டி தன்னை புத்தனென்று சொல்லி நிரந்தரமற்ற சிங்கள அரசியலில் கூலி வேலை பார்க்கிறார்.

**சோம்பேறி மனித உரிமை ஆணைக்குழு மக்களை பேய்க்காட்டுவது**

என் வீட்டில் யாரையும் வைத்திருக்க எனக்குரிய உரிமை மீறப்படுகிறதாக நான் சட்ட நிபுணர்களுடன் பேசி ஆலோசனையை பெறுவதற்கு ஒரு கிழமை கேட்டேன். சரியென்றார் ராகவன். ஆனால் அடுத்த நாளே தான் உடனடியாக முகாமிற்குச் செல்ல வேண் டுமென்ற செய்தி ஃபெனான்டோவிடமிருந்து அபா ஸிற்கு வந்தது. என்னை மாட்டிவிட்ட பொன்னையா பாதிரியார் வழக்கென்றால் தான் சாட்சியாயும் வர மாட்டாரென்று சொல்லிப்போட்டு ஓடிவிட்டார். அபாஸ் அப்போது தான் பொலிஸோடு மோத விரும்பவில்லை என்று சொல்லி குடும்பத்துடன் அங்கு சிங்கள காடை யர் வந்து முகாமை தாக்கிய செய்தியையும் கவனத் தில் எடாது வவுனியா அகதி முகாமிற்குச் சென்றார்.

பரிசுத்த வேதாகமம் எம்மை (லேவியாகமம் 15) சிறியவனுக்கு முகதாட்சணியம் செய்யாமலும், பெரி யவனுடைய முகத்துக்கு அஞ்சாமலும், நீதியை கொடுக் கச் சொல்லியுள்ளது.

ஆகவே நான் தனியாக ஆளுநருக்கும் ஓ.ஐ.சீ. இற்கும் எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் வழக்குத்தாக்கல் செய்தேன். அது, பெரியோரின் முன்பு தலை குனியும் ஒரு பல்லற்ற ஆணைக்குழு. அரச நிறுவனங்களுக்கும் அதிகாரிகளுக்கும் எதிராக மட் டுமே வழக்குத் தாக்கலாம். அவர்கள் சமூகப் பெரி யோர்களாய் இருப்பார்கள். ஆகவே ஆணைக் குழு விற்கு பதிலாளிகளை வரக்கட்டாயப்படுத்தும் அதிகா ரம் இருந்தும் அது உபயோகிக்கப்படுவதில்லை. இத னால் முதல் நாள் நான் கஷ்டப்பட்டு கொழும்பு சென்று ஆணைக்குழு சேர, அப்போது தான் ஆளுந ரும் ஓ.ஐ.சி. உம் தமக்கு வரமுடியாதென்று அனுப் பிய பக்ஸ் செய்தி வந்தது. அடுத்த முறை ஆளுநர் மாற, திருமதி சார்ள்ஸ் அவர்களும் கூட வேண்டிய நாள் காலைதான் பக்ஸ் அனுப்பி வரவில்லை என் றார். ஓ.ஐ.சி. ஒரு செய்தி தன்னும் அனுப்பாமலே வருகை தரவில்லை என்றார்கள். ஆணைக்குழு அங்கத்தவர்கள் யாருமே அங்கு இருக்கவில்லை. மக்களுக்கு நீதி தருவோம் என்று பேய்க்காட்டுவ தென்பது என்றால் இதுதான். நான் ஆணைக்குழுவி லிருந்து பதில் ஒன்றையும் எதிர்பார்க்காததால் கடு மையாய் கண்டித்து ஒரு கடிதத்தைக் கொடுத்தேன். ஆணைக்குழுவின் தீர்ப்புகள் பரிந்துரைகளே தவிர, கட்டாயப்படுத்தும் தண்டனைகளில்லை. ஏன்? என் பெண்சாதிக்கு 15 வருடங்கள் முன்பு வழங்கப்பட்ட ரூ 50,000 நஷ்டப் பணம் இன்னும் கிடைக்கவில்லை.

அடுத்த திகதி 23 (இம்மாதம்). இரு வருடங்கள் பின்பு இன்னும் ஒரு சந்திப்பும் நடக்கவில்லை. அரைவாசி விடயங்கள் மறந்தும் போயின. கெட்ட அதிகாரிகளை காப்பாற்றுவதுபோல் என்று எனக்குப் படுகிறது. அல்லது சோம்பேறி ஆணைக்குழு வின் வேலையை குறைப்பதற்கா? எனக்குத் தெரிய வில்லை.

19 ஆம் திருத்தத்திற்குக் கீழ் நியமிக்கப்பட்ட குழுவே இப்படி பேய்க் காட்டினார்களென்றால், 20இன் கீழ் நியமிக்கப்பட்ட அரசியல்வாதிகள் என்ன செய்வார்கள்? பார்ப்போம்.

**ஜெனிவாவும் சீருடைக்காரரும்**

இலங்கைக்குள் சீருடை தரிப்பவர்களை கட்டுப்ப டுத்த முடியாது. உச்ச நீதி மன்றத்தால் சிறுபிள்ளை யைக் கொலை செய்ததாக தீர்க்கப்பட்ட ரட்நாயக்க என்பவன் எமது ஜனாதிபதியாலேயே மன்னிக்கப்பட் டான். இதுபற்றி நியு ஜேசி மாநிலத்தின் மூத்த செனட் அங்கத்தவரான ரொபேட் மெனென்டேஸ் தன் அமெ ரிக்க செனட் அறிக்கையில் நாம் ஒரு போர் குற்றவா ளியை வாக்களித்து எமது ஜனாதிபதியாக்கியுள்ளோம் என்று குறிப்பிட்டுள்ளார். இந்த மனித உரிமைப் போரில் ஜெனிவாவில் 23.03.2021அன்று கிடைத் தது மாபெரும் ஜனநாயக வெற்றியாக முதல் தடவை யாக சீருடை தரித்து கொலைகாரராய் வந்து பெரிய உத்தியோகங்களில் அமர்த்தப்பட்டவர்களை சிறைக்கு அனுப்பும் சந்தர்ப்பம் கிட்டலாம்.

நாமும் ஒரு ஜனநாயகம் என்கிறோம். ஒரு ஜன நாயகத்தில் நாடாளுமன்றத்திற்கே மேலாதிக்கமாம். அப்படி என்றால் ஆமிக்காரரை கண்டு நடுங்கு வோமா? நாடாளுமன்றம் அமைத்த மனித உரிமை ஆணைக்குழு இப்படி ஒரு கேலிக்கூத்தாகுமா? நாடாளுமன்றம் அமைத்த 13 ஆம்சீர்திருத்தத்தின் கீழ் பொலிஸ்காரரும் எம் காணிகளும் எமக்குக்கீழ் தான். பொலிஸார் எம்முடன் தமிழில் பேச நாம் அவர்களை கண்டு நடுங்க வேண்டியதுமில்லை, அவர்களுக்கு வரிசையில் இடங்கொடுக்கவேண்டி யதுமில்லை.

ஜெனிவாவில் 13 ஆம் சீர் திருத்தத்தைப் பற்றிய வசனங்கள் ஜனநாயகம் எமக்கு வரமுன்பு கேட்கும் மணி ஓசை போல். இதற்கு நாம் எப்போதும் நன்றியாய் இருக்கக்கடவோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் புதிய பாம் மரங்களை வளர்க்க இடமளிக்க முடியாது

## என்கிறார் பந்துல

கொழும்பு, ஏப். 08

பாம் எண்ணெய் இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ள போதிலும் பிஸ்கட் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் பாம் எண்ணெயை தடை செய்யவில்லை, இவை தொடர்ந்தும் விதிமுறைகளுடன் இறக்குமதி செய்யப்படும் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன சபையில் தெரிவித்தார்.

தேசிய ரீதியில் உற்பத்தி செய்யப்படும் பாம் எண்ணெய்க்கு தடை இல்லை எனவும், புதிதாக பாம் மரங்களை வளர்ப்பதற்கு இடமளிக்கப்படாது எனவும் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை, வாய்மூல கேள்விகளுக்கான விடைகள் நேரத்தில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பால்மா குறித்து ஆளும் கட்சி உறுப்பினர் மொஹம்மட் முஸம்மில் கேள்வி எழுப்பினார். இதற்கு பதில் தெரிவித்த அமைச்சர் பந்துல குணவர்தன -

கடந்த 2015 - 2019 ஆண்டு காலத்தில் இலங்கைக்கு 46.1 கோடி கிலோகிராம் பால்மா இறக்குமதி செய்யப்பட்டுள்ளது, இதற்காக 2 லட்சத்து 13 ஆயிரத்து 8 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2010 - 2014 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட தொகையை விடவும் கடந்த ஐந்து ஆண்டுகளில் அதிகமாக இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. எவ்வாறு இருப்பினும் பால்மா, சீனி போன்றவற்றில் உடலுக்கு ஒவ்வாத அல்லது விஷ திரவங்கள் இருக்கின்றன என நீண்டகால விவாதமொன்று உள்ளது. உணவு தர நிர்ணயம் தொடர்பாக இப்போது பல்வேறு சர்ச்சைகளும் எழுந்துள்ளன.

எவ்வாறு இருப்பினும் உணவு தர நிர்ணய நிறுவனத்துக்கு மேலாக வர்த்தக அமைச்சின் சில நிறுவனங்கள் உள்ளன. அவர்களின் ஆய்வுகளுக்கு இவை உட்படுத்தப்படுவதுடன் உலகமே ஏற்றுக்கொள்ளும் தரமானஆய்வுகூடமும்பேராதனைப்பல்கலைக்கழகத்தில் உள்ளது.

ஆகவே இப்போது அரசாங்கம் இறக்குமதிகளை கட்டுப்படுத்தும் வேலைத்திட்டத்தை உருவாக்கி வருகின்றது. அரசாங்கம் பாம் எண்ணெய் இறக்குமதியையும் தடை செய்துள்ளது என்றார்.

இதன்போது ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய எதிர்க்கட்சி உறுப்பினர் குமார் வெல்கம, தேசிய ரீதியில் பாம் எண்ணெய் உற்பத்திகள் முன்னெடுக்கப்படுகின்றன, அதனைப் பயன்படுத்த அரசாங்கம் அனுமதி வழங்குகின்றதா? எனக் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதில் தெரிவித்த அமைச்சர் பந்துல குணவர்தன, தேசிய ரீதியிலான உற்பத்தியைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே நாட்டுக்குள் உற்பத்தி செய்யப்படும் பாம் எண்ணெயை அதன் தரம் உறுதிபடுத்தப்பட்டுள்ளது என்றால் அதனை அரசாங்கம் தடைசெய்யாது. வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யும் எண்ணெயையே தடைசெய்துள்ளோம். அதுவும் ஒரேடியாகத் தடைசெய்ய முடியாது. பிஸ்கட் போன்றவற்றுக்கு இவை பயன்படுத்தப்படுகின்றது. எனவே அதற்குத் தேவையான சுத்தமான பாம் எண்ணெய் இறக்குமதி செய்யப்படும். - என்றார்.

மீண்டும் கேள்வி எழுப்பிய வெல்கம எம்.பி. தேசிய உற்பத்தியாளர்கள் புதிதாக பாம் மரங்களை வளர்க்க இடமளிக்க முடியுமா?. அதற்கு பதிலளித்த அமைச்சர் பந்துல் இல்லை, புதிதாக பாம் மரங்களை வளர்க்க இடமளிக்க மாட்டோம். - என்றார்.

# பாவனையாளர் நலன்கருதியே சட்டம் புதிதாக திருத்தப்பட்டது

## கிண்ணியாவில் ரிஷாத் எம்.பி.

தேங்காய் எண்ணெயை பாம் ஒயிலுடன் எத்தனை வீதம் கலக்க முடியும் என்று முன்னர் இருந்த சட்டத்தை, 2016 ஆம் ஆண்டு நான் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் சரிசெய்து, பாவனையாளர் நலன்கருதி அதனை திருத்தியதாகவும், 1980ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அந்த பழைய சட்டத்தை பயன்படுத்தி மோசடிகள் இடம்பெற்றதாலேயே இந்த திருத்தத்தை கொண்டு வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் திருமலை மாவட்ட மத்திய குழுவினருடனான கலந்துரையாடல், கட்சியின் தலைவர் ரிஷாத் பதியுதீனின் தலைமையில், நேற்று முன்தினம் கிண்ணியாவில் இடம்பெற்றது.

1980 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்த சட்டத்துடன் ஏற்கனவே இது தொடர்பில் சுற்றுநிருபம் ஒன்றும் இருந்தது. அதில் எவ்வாறு எண்ணெய்களை கலந்து அதாவது, பாம் ஒயிலை தேங்காய் எண்ணெயுடன் 25 வீதம் கலக்க முடியும் என்றும், அதற்கான அனுமதியையும் அந்த சட்டம் கொண்டிருந்தது. அந்த அனுமதியை பயன்படுத்தி கடந்த காலங்களில், 25 சத வீதத்துக்கு பதிலாக 50 சதவீதம், 75 சதவீதம் எனக் கலந்து மோசடி செய்தார்கள்.

எனவேதான், குறிப்பிட்ட தேங்காய் எண்ணெய்யில் என்ன கலந்திருக்கின்றார்கள்? எத்தனை சதவீதம் கலந்திருக்கின்றார்கள்? யார் இதனை செய்திருக்கிறார்கள்? என்பதை எழுத்துருவிலே அந்தந்த போத்தல்களிலே ஒட்ட வேண்டும் என்று கட்டாயமாக்கி, ஒரு சட்டத் திருத்தத்தை கொண்டு வந்தேன். இதனை நல்ல நோக்கத்திலேயே மேற்கொண்டேன். திருடர்களை பிடிப்பதற்காகவும், பாவனையாளர் தாம் பயன்படுத்தும் பொருள்களின் உள்ளடக்கம் என்னவென்று அறிந்துகொள்வதற்காகவுமே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஆனால், இவ்வாறான நல்ல நோக்கத்துடனான சட்டத்தை நான் கொண்டு வந்ததினாலேயே, தற்போது நடைபெற்றுள்ள அநியாயம் நிகழ்ந்ததாக கூறுகின்றனர். சிங்கராஜவில் இடம்பெற்று வரும் காடழிப்பு, கோடிக்கணக்கில் இடம்பெற்றுள்ள சீனி மோசடி ஆகியவற்றிலிருந்து மக்களைத் திசை திருப்பும் நோக்கில், என்னை தொடர்புபடுத்தி இந்தப் புரளியை கிளப்பியுள்ளார்கள்.

எண்ணெய் இறக்குமதியின் போது, சுங்கத் திணைக்களம் அவற்றை பரிசீலிக்க வேண்டும். SLSI இலங்கை தரக் கட்டளை நிறுவனம் அதனை ஆராய வேண்டும். அதேபோன்று உணவுத் திணைக்களம் மற்றும் சுகாதார அமைச்சின் கீழ் உள்ள உணவுப் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட ஆய்வு மையம் ஆகிய நிறுவனங்கள் இதனைக் கட்டாயம் பரிசீலிக்க வேண்டும் என்ற சட்டமும் இருக்கின்றது.

இவற்றில் ஒன்றையும் செய்யாமல் அவர்களுக்கு ஏற்றாற்போல இறக்குமதி செய்துவிட்டு, அவர்களின் நண்பர்கள் மற்றும் வியாபாரிகளுக்கு பாரிய தொகையில் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கிவிட்டு, மொத்தமாக கொள்ளையடிக்க எடுத்த முயற்சி அம்பலமாகியுள்ளது. இதன் காரணமாக புற்றுநோயை ஏற்படுத்தும் சதியும் தெரியவந்துள்ளது.

இந்த நாட்டில் எது நடந்தாலும் ரிஷாத் பதியுதீன் தான் காரணம் என்று சமூக ஊடகங்களில் பொய்களை பரப்புவது வாடிக்கையாகிவிட்டது.

அந்தவகையில், இந்த விவகாரத்தையும் என்னுடன் சம்பந்தப்படுத்தி, சமூக வலைத்தளங்களில் பொய்யான பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். எனினும், பெரும்பான்மை சமூகமும் இவற்றின் உண்மைத்தன்மையை தற்போது உணரத் தொடங்கியிருக்கின்றார்கள் - என்றார்.

# யாழ்.மாநகர சபையினால் காவல்படை உருவாக்கம்

யாழ். மாநகர சபையால் முதன்முறையாக காவல் படை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

குறித்த மாநகரப் பாதுகாப்புப் படை இன்று (வியாழக்கிழமை) அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ள நிலையில், நேற்று (புதன்கிழமை) பரீட்சார்த்தப் பணியை குறித்த காவல்படை முன்னெடுத்துள்ளது.

இதன்படி, நல்லூர் சுற்றாடலில் வாகன ஒயில் ஊற்றப்பட்டுள்ள நிலையில், விபத்துக்களைத் தவிர்க்கும் முகமான முன்னாயத்த நடவடிக்கைகளை இந்த மாநகர காவல் படை கண்காணித்தது.

யாழ். மாநகரில் சுகாதார நடைமுறைகளைக் கண்காணிப்பதற்கும் கழிவகற்றல் பொறிமுறையைக் கண்காணிப்பதற்கும் மற்றும் மாநகரின் ஒழுங்குமுறை உள்ளிட்டவற்றைக் கண்காணிப்பதற்கும் என குறித்த மாநகர காவல் படை உருவாக்கப்பட்டுள்ளது.

# மன்னார் சித்திவிநாயகர் தேசிய பாடசாலையில் திறன் அபிவிருத்தி வகுப்பறை நேற்று ஆரம்பிப்பு

மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலையில் அமைக்கப்பட்டதிறன்அபிவிருத்தி வகுப்பறைகள் நேற்று (புதன்கிழமை) காலை வைபவ ரீதியாகஆரம்பித்துவைக்கப்பட்டது.

மாணவர்களின் கல்வி தேர்ச்சியை அதிகரிக்கும் முகமாகவும் நவீன தொழில் நுற்ப முறைகள் மூலம் கற்கைகளை மேற்கொண்டுநடத்தவும்அமைக்கப்பட்ட திறன் அபிவிருத்தி வகுப்பறைகள் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

சித்திவிநாயகர் தேசிய பாடசாலையின் லண்டன் பழைய மாணவர்கள் சங்கம் மற்றும் மனித நேய நம்பிக்கை நிதியதின் நிதி ஒதுக்கீட்டில் பாடசாலை பிரதி அதிபர் பி.எல். குரூஸ் தலைமையில் குறித்த நிகழ்வு இடம் பெற்றது.

இதன் போது விருந்தினராக கலந்து கொண்ட மன்னார் வலய கல்விப் பணிப்பாளர் கே.ஜே. பிறட்லி நேற்று (புதன்கிழமை) காலை 9.30 மணியளவில் வைபவ ரீதியாக வகுப்பறைகளைத் திறந்துவைத்தார்.

லண்டன் பழைய மாணவர் சங்கம் மற்றும் மனித நேய நம்பிக்கை நிதியத்தின் நிதி உதவியுடன் நான்கு திறன் அபிவிருத்தி வகுப்பறைகள் வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் வலய கல்வி பணிப்பாளர் கே.ஜே. பிறட்லி, சிறப்பு விருந்தினர்களாக மன்னார் கோட்டக் கல்வி உத்தியோகத்தர் பு.சந்தியோகு, மனித நேய நம்பிக்கை அமைப்பின் உறுப்பினர்கள் நலிவுற்றோர் நலன் காப்பு நிதிய அதிகாரிகள், சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலையில் உப அதிபர், பழைய மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## தினம் ஒரு விவசாயத் தகவல்

### நிலக்கடலை வர்க்கங்களின் உறங்குநிலை




சில நிலக்கடலை வர்க்கங்கள் உறங்கு நிலையில் காணப்படும். இந்த நேரத்தில் விதைகளை நடுவோமாயின் அவை முளைக்காது. ஆய்வின்படி வளவை லங்கா ஜம்போ, டிக்கிரிபோன்றவர்க்கங்கள்ஏழுவாரங்களிற்கு உறங்குநிலையில் காணப்படும்.

எனவே விவசாயிகள் இந்த வர்க்கங்களை பயிரிடுவார்களாயின் 7 வாரங்களுக்கு பிறகு நடுவது (விதைப்பது) முக்கியமானதாகும். அவற்றின் முளைதிறன் அதிகமாகவே காணப்படும்.

எனினும் சுமார் 4 - 6 மாதங்களுக்கு பிறகு மீண்டும் முளைதிறனை இழந்து விடும். திணைக்கள ஆலோசனைகளுக்கு அமைவாக நிலக்கடலை விதைகளை பதப்படுத்தினால் 4 - 6.

மாதங்களிற்கு மேல் சேமித்து வைத்துக் கொள்ள முடியும். சில வேளைகளில் 7 - 8 மாதங்கள் வரை கூட சேமித்து வைக்கலாம். இது விவசாயிகளின் விதை பிரச்சினைக்கு ஒரு தீர்வாக அமையும். ஏ.என் கே.ஜி 1, திஸ்ஸ போன்ற வர்க்கங்களில் உறங்குநிலை காலம் இல்லை. எனவே, விரைவாக முளைக்கின்றன. இந்தி என்னும் வர்க்கமும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இவ்வாறே முளைக்கின்றது

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# ஒற்றையாட்சி முறை பெரும் தோல்வியில்!

## சமஷ்டி அல்லது கூட்டாட்சியே உயர்வுக்கு ஒரே வழி
## அரசமைப்புக் குழு முன் விக்கி அணி எடுத்துரைப்பு



**கொழும்பு, ஏப்ரல் 07**

**நாட்டின் இன்றைய பேரழிவுச் சூழலுக்கும் பின்னடைவு நிலைக்கும் ஒற்றையாட்சி அரசமைப்பு முறையே காரணம். பொருளாதார ரீதியிலும், பிற விடயங்களிலும் இலங்கை தோற்றுப் போன நாடாகத் துவண்டு கிடப்பதற்கு ஒற்றையாட்சி முறையே முழுக்காரணமாகும். சமஷ்டி (Federal) அல்லது கூட்டாட்சி (Confedral) முறைமையிலான அரசமைப்பு ஒன்று உருவாக் கப்பட்டதால்தான் இந்த நாடு மீண்டெழுந்து அமைதி, சமாதானம், அபி விருத்தி, நல்லிணக்கம் ஆகிய உயர் வழிகளில் மேலுயர முடியும்.**

**- இப்படி புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நிபுணர் குழு முன்னி லையில் நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் தலை மையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி இன்று காலை எடுத்துரைத் திருக்கின்றது.**

கொழும்பு பண்டாரநாயக்கா ஞாப கார்த்த மாநாட்டு மண்டபத் தொகுதியில் உள்ள நிபுணர் குழுவின் கலந்துரை யாடல் மண்டபத்தில் இன்று காலை 9 மணி முதல் சுமார் ஒன்றரை மணி நேரம் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பாகத் தனது கருத்துக்களை முன்வைத்தது.

அந்தக் கூட்டணி சார்பில் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் தலைமையில் க.சுரேஷ் பிறேமச்சந்திரன், கலாநிதி க.சர் வேஸ்வரன், எம்.கே. சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன், செல்வேந்திரா ஆகி யோர் பங்கு பற்றினர்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி அங்கு தெரிவித்த முக்கிய கருத்துக்களின் சாரம் வருமாறு:-

இலங்கை ஒரு பல்லின, பல்மத, பல் மொழி பேசும் மக்களைக் கொண்ட நாடு என்பதை இலங்கை அரசு ஏற்று, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் கைச் சாத்திட்டுள்ளது. அந்த யதார்த்தத்தை ஏற்று அங்கீகரிக்கும் ஓர் அரசமைப்பு மூலமே நாட்டை மேம்படுத்த முடியும்.

தமிழ் மக்கள் மீது சிங்களவரின் பெரும் பான்மையின் மூலம் வல்வந்த மாகத் திணிக்கப்பட்ட ஒற்றையாட்சி அர சமைப்பு முறைமை பெரும் தோல்வி கண்டு விட்டது. இன்று நாடு எதிர்கொண் டுள்ள பேரிழப்புக்களுக்கும், பின்னடைவு களுக்கும் அவலங்களுக்கும் அதுவே - அது மட்டுமே - காரணம். அதனால்தான் அதிலிருந்து வெளியே வருமாறு நாம் கோருகின்றோம்.

சமஷ்டியும் கூட்டாட்சியும் பிரிவினை அல்ல. ஒன்றுபட்டு, ஐக்கியமாக வாழ்வதற் குரிய உயரிய முறைமைகளே அவை.

நாடாளுமன்றுக்குப் பதில் கூறக் கூடிய பிரதமரின் கீழ் நிறைவேற்றதிகாரம் பிர யோகிக்கப்படும் ஒரு முறைமை என்றால் அதன் கீழ் சமஷ்டி முறை (Federal) அரசமைப்பையும் -

அப்படியில்லாமல் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையைத் தொடர்வதாக இருந்தால் கூட்டாட்சி (Confedral) முறை அரசமைப்பையும் -

ஏற்படுத்துவதே நாட்டின் மேன் மைக்கு ஒரே வழியாகும்.

உலக நாடுகள் பலவற்றிலும் பல்லின, பல்மொழி, பல் சமூக தேசங்களை ஒன் றிணைக்கும் உயரிய ஆட்சி முறையாக இந்த இரண்டுமே உள்ளன.

சிறுபான்மை இனங்களையும் உள் வாங்கும் ஓர் அரசமைப்பை இலங்கை ஏற்படுத்த வேண்டும் என்றால் இந்த இரண்டில் ஒன்றுக்கு இணங்குவது தவிர்க்க முடியாத கட்டாயமாகும். - என்று தெரிவிக்கப்பட்டது.

# 11 இஸ்லாமிய அமைப்புகள் இலங்கையில் இனித் தடை

## சட்டமா அதிபர் அனுமதி



ஐ.ஸ்.ஐ.ஸ்., அல் குவைதா உட்பட 11 பிரிவினைவாத இஸ் லாமிய அமைப்புக்கள் மீது இலங்கை அரசு இன்று முதல் அதிரடித் தடை உத்தரவை அறி வித்துள்ளது.

சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவினால் வெளியிடப்பட் டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவிரவாத நடவடிக்கைகளு டன் தொடர்புடைய இஸ்லாமிய அமைப்பு களே இவ்வாறு தடை செய்யப்பட்டுள்ளன என்று சட் டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தௌஹீத் ஜமாத், சிலோன் தௌஹீத் ஜமாத், ஸ்ரீலங்கா தௌஹீத் ஜமாத், அகில இலங்கை தௌஹீத் ஜமாத், ஜம்மயத்துல் அன்சாரி சுன்னத் துல் மொஹம்மதியா, தாருல் அதர் அல் லது ஜாமிஉல் அதர், ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கம், ஐ.எஸ்.ஐ. எஸ்., அல்கைதா, சேவ் த போர்ல்ஸ், சுபர் முஸ்லிம் ஆகிய இஸ்லாமிய அமைப்புகளே இலங்கையில் தடை செய்யப்பட் டுள்ளன.

# யாழில் 57 பேருக்கு கொரோனாத் தொற்று

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஏப்.07

யாழ்ப்பாணம் நகர வர்த்த கர்கள் மற்றும் நகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குள் இரு நாள்களாக பெறப்பட்ட 861 பி.சி.ஆர். மாதிரிகள் மூன்று இடங்களில் பரிசோதனைக்காக அனுப்பியவற்றில் 57 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட் டுள்ளது.

யாழ்ப்பாணம் வர்த்தகர்க ளிடம் நேற்று முன்தினம் பெறப் பட்ட 487 மாதிரிகளில் இருந்து 54 வர்த்தகர்களிற்கு கொரோ னாத் தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது. இதேநேரம் நேற் றைய தினம் நகர வர்த்தகர்களி டம் இருந்து 197 மாதிரிகள் பெறப் பட்டன. இவற்றின் முடிவும் உறுதி செய்து இதுவரைக் கிடைக்க வில்லை. அதே போன்று சுய தனிமைப்படுத்தலிற்கு உட்பட்டி ருந்த 184 பேரிடம் பெறப்பட்ட மாதிரிகளில் பெறுபேறும் இன் னும் கிடைக்கவில்லை.

**விளம்பரத் தொடர்புகளுக்கு -**
**மின்னஞ்சல் -**
kalaikkathiradvt@gmail.com
**தொலைபேசி இலக்கம் -**
**076 443 8622**

**ஓய்வுபெற்ற திறமையான**

## சி.ஐ.டி. அதிகாரிகள் மீண்டும் சேவையில்

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற திறமையான அதிகாரிகளை மீண்டும் பணியில் இணைத்துக் கொள்ளத் தீர்மானித்துள்ளோம் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரி வித்தார்.

குற்றப் புலனாய்வுத் திணைக் களம் என்பது, திறமையான அதி காரிகள் இருக்கும் இடம் என் றும், இத னால் ஓய்வுபெற்ற அதி காரிகளின் சேவைகள் தொடர்ந் தும் இருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். இதன்படி ஓய்வுபெற்ற திறமையான அதி காரிகள் மீண்டும் குற்றப்புலனாய் வுத்திணைக்களத்துக்குஇணைத் துக் கொள்ளப்படுவார்கள் என் றும் அவர் மேலும் கூறினார்.

# எம்.பி. பதவியை இழந்தார் ரஞ்சன்



நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறைத் தண் டனை விதிக் கப்பட்டுள்ள ரஞ்சன் ராம நாயக்கவின் நாடாளுமன்ற ஆசனம் வெற்றிடமாகி யுள்ளது எனச் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன சபை யில் இன்று அறிவித்தார்.

நாடாளுமன்ற ஆசனம் வெற்றிடமாகியுள்ளமை தொடர்பில் நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தால் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் சபாநாயகர் தெரி வித்தார்.

கடந்த பொதுத்தேர்தலில் சஜித் பிரே மதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்டு ரஞ்சன் ராமநாயக்க வெற் றிபெற்றிருந்தார்.

இந்நிலையில், ரஞ்சன் ராமநாயக்க வுக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட ரஞ்சன் ராம நாயக்கவுக்கு 4 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து கடந்த ஜனவரி 12 ஆம் திகதி உயர்நீதி மன்றத்தால் தீர்ப் பளிக்கப்பட்டது.

இதையடுத்து, தனது நாடாளுமன்ற ஆசனத்தை இரத்துச் செய்வதைத் தடுக்கும் வகையில் உத்தரவு பிறப்பிக்கக் கோரி ரஞ்சன் ராமநாயக்க சார்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

எனினும், குறித்த ரிட் மனுவை கடந்த 5ஆம் திகதி மேன் முறையீட்டு நீதி மன்றம் தள்ளுபடி செய்திருந்தது.

இதையடுத்து அவரின் ஆசனம் வெற்றிடமாகியுள்ளது என நாடாளுமன்ற செயலாளர் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறி வித்துள்ளார் எனச் சபாநாயகர் இன்று தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரவையில் முன்வைக்கப்படும் யோசனைகள் உடனடியாக சட்டமாகா!

## புர்கா தடை, இளைஞர்களுக்கு இராணுவ பயிற்சி வீரசேகரவின் கருத்துக்குக் கெஹலிய பதில்



அமைச்சரொருவர் முன்வைக்கும் எந்தவொரு யோசனையும் உடனடியாகச் சட்டமாக்கப்பட மாட்டாது. அமைச்சரவையில் முன்வைக்கப்படுகின்ற யோசனைகளில் காலத்திற்கு உகந்தவை தொடர்பில் மாத்திரமே துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போது கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

கேள்வி:- புர்கா தடை மற்றும் இளைஞர்களுக்கான இராணுவப் பயிற்சி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் அமைச்சர் சரத் வீரசேகரவால் வெளியிடப்பட்ட கருத்துக்கள், நாட்டில் தற்போது காணப்படுகின்ற பிரச்சினைகளை மறைத்து மக்களை ஏமாற்றுவதற்காகவா? அந்த யோசனைகள் ஏன் இன்னும் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவில்லை?

பதில்:- அவ்வாறு எந்த எதிர்பார்ப்பும் இல்லை. எந்தவோர் அமைச்சருக்கும் தனது அமைச்சுடன் தொடர்புடைய தீர்மானங்களை அதிகாரிகளுடன் இணைந்து முன்னெடுக்க முடியும். இவ்வாறு எடுக்கப்படும் தீர்மானங்கள் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டால் அது தொடர்பில் துரிதமாக நடவடிக்கை எடுப்பதா அல்லது காலம் தாழ்த்தி நடவடிக்கை எடுப்பதா என்று அமைச்சரவையே தீர்மானிக்கும்.

எனவே அமைச்சரொருவர் முன்வைக்கும் எந்தவொரு யோசனையும் உடனடியாகச் சட்டமாக்கப்படமாட்டாது. குறித்த யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு, அமைச்சரவை அதற்கு அனுமதி வழங்கினால் சட்ட மூலம் தயாரிக்கப்படும். அதன் பின்னர் அதனை நடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றிக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த படிமுறைகளுக்கு இடைப்பட்ட காலத்தில் இந்த விடயத்தில் மாற்றங்களும் ஏற்படக் கூடும். இவ்வாறான விடயங்கள் பரந்துபட்டளவில் தீர்மானிக்கப்பட வேண்டியவையாகும். அத்தோடு காலத்துக்கு ஏற்ற யோசனைகள் தொடர்பில் மாத்திரமே துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# தேங்காய் எண்ணெய் விலை அதிகரிப்பா? அவதானம் செலுத்தியுள்ளது அரசாங்கம்

பாம் எண்ணெய் இறக்குமதித் தடை காரணமாகத் தேங்காய் எண்ணெய் விலை அதிகரிக்கப்படுமாயின் அது தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் –

'பாம் எண்ணெய் இறக்குமதித் தடையின் காரணமாக தேங்காய் எண்ணெய்யின் விலை அதிகரிக்கப்படுமா?' என்ற கேட்கப்பட்டபோதே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேங்காய் எண்ணெய் விலை அதிகரிப்பு தொடர்பில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை. எனினும் இது தொடர்பில் அவதானம் செலுத்தி தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாம் எண்ணெய் இறக்குமதித் தடை காரணமாக தேங்காய் எண்ணெய் விலை அதிகரிக்கப்படுமாயின் அது தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் வேறுபட்ட நிலைப்பாடுகள் காணப்படுகின்றன. எனவே சில மாற்றங்கள் ஏற்படக் கூடும்.

தேங்காய் எண்ணெய் தொடர்பான வர்த்தமானி பற்றி அமைச்சரவையில் அவதானம் செலுத்தப்படவில்லை. எனவே விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் பந்துல குணவர்தன விடம் இது தொடர்பில் கேட்டறிந்த பின்னர் மக்களுக்குத் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

எண்ணெய் பிரச்சினை திடீரென தோன்றியதல்ல. நீண்ட காலமாக இடம்பெற்று வருவதாகும். எவ்வாறிருப்பினும் தற்போது இவை கண்டு பிடிக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சிக்குரியது.

எனவே இவை எங்கிருந்து கொண்டு வரப்பட்டன என்பதை விட ஏனைய காரணிகளே முக்கியத்துவமுடையவையாகும்.

இந்த விவகாரம் தற்போது சமூகத்திற்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதே வேளை இந்த உண்மை வெளிப்படுத்தப்பட்டிருக்காவிட்டால் ஏற்பட்டிருக்கும் நிலைமை என்ன என்று சிந்திக்க வேண்டும்.

எனவே தான் இது தொடர்பில் முழுமையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்தால் தொடர்ந்தும் கலந்துரையாடப்பட்டு வருகிறது. இந்தப் பிரச்சினைக்கு நிரந்தத் தீர்வைக் காண்பதற்கும், அத்தோடு இதனுடன் ஏதேனுமோர் அரச அல்லது தனியார் துறை அதிகாரிகள் தொடர்புபட்டிருப்பார்களாயின் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் எதிர்பார்த்துள்ளோம். - என்றார்.

# வெலிக்கடைச் சிறைச்சாலை பெண்கள் பிரிவுக்குள் தடைசெய்யப்பட்ட பொருள்களுடன் மர்மப் பொதி

வெலிக்கடைச் சிறைச்சாலையில் பெண் கைதிகளின் பிரிவுக்குள் எறியப்பட்டிருந்த தடை செய்யப்பட்ட பொருள்கள் அடங்கிய பொதியைக் கைப்பற்றிய சிறைச்சாலை அதிகாரிகள், அதனை மேலதிக விசாரணைகளுக்காக பொரள்ள பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்கள ஊடகப்பேச்சாளர் ஆணையாளர் (புனர்வாழ்வு மற்றும் நிர்வாகம்) சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

கொவிட் – 19 வைரஸ் பரவல் காரணமாக வெலிக்கடைச் சிறைச்சாலையின் பெண் கைதிகளின் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள் அனைவரும் தற்காலிகமாக அகற்றப்பட்டிருந்தமையுடன், கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் மீண்டும் அவர்கள் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் இந்த பகுதிக்கு தற்போது தடை செய்யப்பட்ட பொருள்கள் அடங்கிய பொதிகள் எறியப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், இத்தகைய பொருள்கள் அடங்கிய பொதிகள் சிறைச்சாலைக்குள் எறியப்படுவதைத் தடுக்கும் வகையில் சிறைச்சாலை மதில்களுக்கு மேல் பாதுகாப்பு வலை அமைக்கப்பட்டுள்ளது.

எனினும் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு 11.45 மணியளவில் தடை செய்யப்பட்ட பொருள்கள் அடங்கிய பொதியொன்று எறியப்பட்டுள்ளதுடன் இந்த பொதி பாதுகாப்பு வலையில் சிக்குண்டிருந்த நிலையில், சிறைச்சாலை அதிகாரிகள் அதனைக் கைப்பற்றியுள்ளனர்.

இதன்போது, இந்த பொதியிலிருந்து 9 தொலைபேசிகளும், 5 சிம் அட்டைகளும், 14 தொலைபேசி மின்கலங்கள், 8 தொலைபேசி மின் ஏற்றிகள், 10 புகையிலைகள், 20 வெற்றிலைகள், 2 தீப்பெட்டிகள், பாக்கு, சுண்ணாம்பு உள்ளிட்ட பல வேறு தடை செய்யப்பட்ட பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்தப் பொருள்கள் அனைத்தும் மேலதிக விசாரணைகளுக்காக பொரளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி சஹ்ரான் அல்லர்!

## சரத் வீரசேகர கூறுகின்றார்

ஏப்ரல் 21 தற்கொலை குண்டுத்தாக்குதல் சம்பவத்தின் முக்கிய சூத்திரதாரி பயங்கரவாதி சஹ்ரான் அல்லர், கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் உள்ள நௌபர் மௌலவி மற்றும் ஹஜ்ஜுல் அக்பர் ஆகியோராவர்.



இவ்விருவரைக் காட்டிலும் மேலான சூத்திரதாரி எவரும் இல்லை என்பது தற்போது வரை முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகளில் இனங்காணப்பட்டுள்ளது.

குண்டுத்தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் சாரா புலஸ்தினி உயிருடன் உள்ளாரா அல்லது இறந்து விட்டாரா என்பது இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை.

உயிருடன் இருந்தால் அவரைக் கைது செய்வது சாதாரண விடயமல்ல என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையைப் பரிசீலனை செய்த அமைச்சரவை உபகுழுவின் அறிக்கை தொடர்பில் தெளிவுப்படுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு கடந்த செவ்வாய்க்கிழமை அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதன் போது கருத்துரைக்கையில் அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# தரமற்ற பொருள்களை வழங்கியமைக்காக நீதிமன்றை நாடும் நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய இயக்கம்

நாட்டு மக்கள் பயன்படுத்தும் உணவுப் பொருள்களில் உடல் ஆரோக்கியத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் நச்சுப் பதார்த்தங்கள் கலக்கப்பட்டுள்ளன என்பதை உணவு தர நிர்ணயம் தொடர்பில் ஆராயும் அரச அதிகாரிகள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். பாதுகாப்பான உணவை நாட்டு மக்களுக்கு வழங்கும் நடவடிக்கையை அரசாங்கம் இனியாவது முன்னெடுக்க வேண்டும். தர நிர்ணய நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் சித்திகா சேனாரத்னவிற்கு எதிராக முறையான விசாரணைகள் முன்னெடுக்காவிடின் நீதிமன்றை நாடுவோம் என நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள்களில் நச்சுப் பதார்த்தங்கள் கலக்கப்பட்டுள்ளமை தொடர்பாகத் தற்போதைய சூழலில் எழுந்துள்ள சர்ச்சை நிலை பற்றி வினவிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

உடல் ஆரோக்கியத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் உணவுப் பொருள்களை நாட்டு மக்கள் அதிகளவில் உட்கொள்கிறார்கள் என்பதை ஆரம்ப காலத்தில் இருந்து குறிப்பிட்டு வருகிறோம். சுகாதாரமான உணவை மக்களுக்கு வழங்கும் தேசிய கொள்கையை ஆட்சியில் இருந்த எந்த அரசாங்கமும் இதுவரையில் முன்னெடுக்கவில்லை. உற்பத்தி நிறுவனங்களின் நலன் தொடர்பாக மாத்திரமே கவனம் செலுத்தப்பட்டுள்ளன.

இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெயில் அப்லடொக்சின் நச்சுப் பதார்த்தம் கலக்கப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான தரமற்ற உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளமை இதொன்றும் முதல் முறையல்ல இதற்கு முன்னரும் இவ்வாறான தரமற்ற உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டன. இலாப நோக்கத்துக்காகத் தரமற்ற உணவுப் பொருள்களை விநியோகிக்கும் நிறுவனங்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தால் இவ்வாறான பிரச்சினைகள் தற்போது தோற்றம் பெற்றிருக்கா. நச்சுத்தன்மையான உணவுப்பொருள்களை உட்கொள்ளும் மக்கள் வாழும் நாடுகளின் பட்டியலில் இலங்கை முன்னிலை வகிக்கிறது. தரமற்ற உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன என்பதை பொறுப்பில் உள்ள அரச அதிகாரிகள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். அரசாங்கம் இனியாவது நாட்டு மக்களுக்குத் தரமான உணவை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தர நிர்ணய சபையின் பணிப்பாளர் நாயகம் சித்திகா செனவிரத்னவின் கருத்து வன்மையாக கண்டிக்கத்தக்கது. இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்லாடொக்சின் கலக்கப்பட்ட உணவுப் பொருள்கள் பல இறக்குமதி செய்யப்படுகின்றன. அவற்றை குறிப்பிட்டால் நிறுவனங்கள் நட்டமடையும் என பொறுப்பற்ற வகையில் குறிப்பிட்டுள்ள கருத்து தொடர்பில் முறையான விசாரணை நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும். இல்லாவிடின் நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாக்க நீதிமன்றத்தை நாடுவோம்.- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரி நௌபர் மௌலவி என்பது அரசின் புனையப்பட்ட கதை - கிரியெல்ல

ஈஸ்டர் தாக்குதலுக்கு நௌபர் மௌலவி என்பவரே பிரதான சூத்திரதாரி என்பது அரசாங்கத்தால் புனையப்பட்ட கதையாகக் கூட இருக்கலாம் என எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று (புதன் கிழமை) இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அவர், ஈஸ்டர் தாக்குதலுக்கும் புலனாய்வுப் பிரிவினருக்கும் தொடர்பு இருப்பதாகவும் குற்றம் சாட்டினார்.

ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியில் சர்வதேச சக்திகள் இருக்கின்றன எனக் குற்றம்சாட்டப்பட்டுள்ள போதிலும், இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இதுதொடர்பாக எந்தவொரு தகவலும் வெளிக்காட்டப்படவில்லை என்றும் லக்ஷ்மன் கிரியெல்ல கூறினார்.

எனினும், இரண்டு வருடங்களுக்குப் பின்னர் கடந்த செவ்வாய்க் கிழமை பிரதான சூத்திரதாரியொருவரின் பெயர் வெளியிடப்பட்டுள்ளது. ஆனால், நௌபர் மௌலவியை ஆணைக்குழு முன்னிலையில் சாட்சிக்காகக் கொண்டு வரவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு பேராயர் உள்ளிட்ட அனைத்துத் தரப்பும் பிரதான சூத்திரதாரி தொடர்பில் கேள்வி எழுப்பும் இச்சந்தர்ப்பத்திலேயே குறித்த நபரின் பெயர் வெளியிடப்பட்டுள்ளது என குற்றம் சாட்டிய லக்ஷ்மன் கிரியெல்ல இந்தக் கருத்துத் தொடர்பாக எமக்கு சந்தேகம் எழுந்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை சஹ்ரானுக்கு 2009 இலிருந்து 2015 வரை அரசாங்கத்தால் சம்பளம் வழங்கப்பட்டுள்ள போதும் யார் இதனை வழங்கியது என்பது தெரியாது என்றும் அதற்கான சாட்சியங்கள் ஆணைக்குழு முன்பாக வரவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

# உயிர்த்த ஞாயிறு தொடர்பிலான கருத்துக்கள் இனங்களுக்கிடையே ஒற்றுமையைக் குலைக்கும்

## கரு ஜயசூரிய கருத்து



நாட்டில் இனங்களுக்கு இடையிலான ஒற்றுமையைச் சீர்குலைப்பதே உயிர்த்த ஞாயிறுதினப் பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்தியவர்களின் பிரதான நோக்கமாகக் காணப்பட்டது.

தாக்குதல்கள் தொடர்பான விசாரணை அறிக்கை வெளியானதிலிருந்து பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில், நாமனைவரும் ஒற்றுமையுடன் செயற்படவேண்டும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாகக் கரு ஜயசூரிய அவரது டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தியிருக்கிறார்.

அந்தப் பதிவில் அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு -

எமது சமூகத்தின் ஒற்றுமையைச் சீர்குலைப்பதே உயிர்த்த ஞாயிறுதினத்தன்று தாக்குதல்களை நடத்திய தற்கொலைக் குண்டுதாரிகளின் நோக்கமாகக் காணப்பட்டது.

எனினும் அந்த நோக்கத்துக்குப் பலியாகாமல் நாம் வெற்றிபெற்றோம். அதற்காகத் தூரநோக்கு சிந்தனையுடன் செயற்பட்ட மத மற்றும் சமூகத்தலைவர்களுக்கு நன்றி கூறவேண்டும்.

இந்நிலையில்தற்போது உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதல்கள் தொடர்பான விசாரணை அறிக்கை வெளியிடப்பட்டமையைத் தொடர்ந்து, இது தொடர்பாகப் பல்வேறு விதமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் இப்போதும் நாமனைவரும் ஒற்றுமையாக செயற்படுகின்றமை அவசியமாகும் என்று அப்பதிவில் வலியுறுத்தியுள்ளார்.

# பாம் எண்ணெய் இறக்குமதிக்கு சிறப்பு அனுமதி வழங்கப்பட்டது

பிஸ்கட் மற்றும் பேக்கரி உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்தி செயல்முறைக்கு பாம் எண்ணெயை இறக்குமதி செய்வதற்கு சிறப்பு அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

பாம் எண்ணெய் இறக்குமதிக்கு முழுமையாகத் தடைவிதிக்கப்பட்டுள்ள நிலையில், பேக்கரி உரிமையாளர்கள் உள்ளிட்டோர் கடுமையாகப் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர் என வலியுறுத்தி வந்த நிலையில் இந்த சிறப்பு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

25 வருட காலக் கற்பித்தல் அனுபவமுள்ள ஆசிரியரால் தரம் 06 முதல் 11 வரையான மாணவர்களுக்குத் தமிழ் வகுப்புகள் ZOOM செயலி ஊடாக ... இணைந்து கொள்ள,
(076) 454 5709 ஐ அழையுங்கள்!
மாதாந்தக்கட்டணம் 400/= மட்டுமே!

புதிய பிரிவு A/L 2023
கணக்கீடு
திரு. க. பா. பாலகஜன்
M.Com (Hons), B.Com (Jaf.),H.N.Dip.-in. ACC.,Dip.-in-Edu.
பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள்
கொழும்புத்துறை - சனி, ஞாயிறு
2.15 p.m - 3.30 p.m
கந்தர்மடம் - சனி, ஞாயிறு
7.00 a.m - 8.00 a.m
Zoom class - திங்கள்,வெள்ளி
7.30 p.m - 8.30 p.m
A/L 2021 & DAY, A/L 2022 வகுப்புகளும் நடைபெறுகின்றன.
புதிய அனுமதிகளுக்கு அழையுங்கள்.
077 216 8884

# புலமைத்துவ பரப்பில் சிவஞானசோதி ஐயாவின் மறைவு பாரிய இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது

## காதர் மஸ்தான் அனுதாபம்



இலங்கை நிர்வாக சேவையின் மூத்த ஓய்வு நிலை அதிகாரி சிவஞானசோதி ஐயாவின் மறைவு தமிழ்த் தேசியப் பரப்பில் மாத்திரமன்றி முழு இலங்கையின் புலமைத்துவப் பரப்பிலும் பாரிய இடைவெளியைத் தோற்றுவித்திருப்பதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

தான் வகித்த உயரிய பதவிகள் மூலம் அனைத்து மக்களுக்குமான மகத்தான சேவைகளை மனித நேயத்துடன் சிவஞானசோதி ஐயா ஆற்றியிருந்தார்.

எப்பொழுதும் மக்களுக்கு உதவிடும் உயர்ந்த குணங்களையே தன்னிடம் கொண்டிருந்த அவர் நேரகாலம் பாராது மக்களுக்காக உழைத்து வந்தார்.

நான் பிரதி அமைச்சராகப் பதவி வகித்த காலங்களில் பல்வேறு பட்ட அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு திட்டங்களை வகுப்பதில் எனக்கு பக்கபலமாக இருந்து செயற்பட்டமையுடன் அதற்குப் பின்னரான காலங்களிலும் நான் மேற்கொண்ட பல்வேறு அபிவிருத்திகள் தொடர்பில் தனது ஆலோசனைகளை வழங்கி அவற்றை மேம்படுத்தவும் இன்னும் செயற்றிறன் மிக்கதாக விருத்திசெய்யவும் தனது வாண்மைமிக்க பங்களிப்பையும் நல்கினார்.

பல்வேறு அமைச்சுகளின் செயலாளராகப் பணியாற்றியமையுடன் உள்நாட்டிலும் கடல் கடந்தும் பல பயிற்சிகளையும் உயரிய விருதுகளையும் பெற்று தாய்நாட்டுக்கும் பெரும் புகழ் ஈந்தார்.

தனது ஓய்வு நிலைக்குப் பின்னரான காலப் பகுதியில் பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினராகவும் சுயாதீன மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் செயலாளராகவும் பதவி ஏற்று நாட்டின் கீர்த்திக்கு வலுச் சேர்த்தார்.

அன்னாரின் மறைவால் துயருறும் குடும்பத்தினர், நண்பர்கள், புலமையாளர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

வேலையாட்கள் தேவை
சுன்னாகத்தில் இயங்கும் பிரபல உணவகமொன்றிற்கு கீழ்க்காணும் வேலையாட்கள் தேவை.
- றொட்டி, கிழங்கு றொட்டி, சமோசா, றோல்ஸ் தயாரிப்பவர்.
- இடியப்பம், புட்டு, தோசை தயாரிப்பவர்.
- சமையல் உதவியாளர்கள்.
- சுத்திகரிப்பு செய்பவர்கள்.
- ஆண், பெண் இருபாலரும் தொடர்புகொள்ளலாம்.
- வெளி மாவட்டத்தில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிடம் இலவசம்.
077 652 9583

அண்ணா
விரைவுப் பொதிகள் சேவை
எமது சேவையூடாக 11 kg க்கு மேல் பொதிகள் அனுப்பும் வாடிக்கையாளர்களுக்கான
மாபெரும் பரிசுப்போட்டி
நீங்களும் வெற்றியாளராகலாம்...
பிரான்ஸ், ஜேர்மனி பெல்ஜியம்,
1100/=
(11 kg க்கு மேல்)
டென்மார்க் நெதர்லாந்து
Contact :
021 221 56 56
076 122 15 66
070 330 55 00
லண்டன் 1000/=
(11 kg க்கு மேல்)
1ம், 2ம், 3ம் பரிசு : 15kg பொதிகள் அனுப்பும் செலவு இலவசம்...
4 முதல் 10 வரை : 3600/=
பெறுமதியான ஆடைகளுக்கான 10L சலவைத்திரவம் 01 இலவசம்...
யாழ்ப்பாணம் சங்கானை கல்வியங்காடு ஆவரங்கால் நெல்லியடி கைதடி
சங்கத்தானை பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு கனகராயன் குளம்
மல்லாவி மன்னார் வவுனியா திருகோணமலை மட்டக்களப்பு கொழும்பு

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.04.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org